வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 30.10.2024 புதன்கிழமை | இதழ் : 303 | பக்கங்கள் : 12

# திருட பழகியவர்களுக்கு வாய்ப்பு கேட்கும் கட்சிகள்

## எதிர்த்தரப்பினர்மீது ஜனாதிபதி அநுர கடும் சாடல்
## நாம் யார் என்பதை காட்டுகிறோம் என்றும் சவால்

கொழும்பு, ஒக்ரோபர் 30

**“திருடப் பழகிய, சட்டவிரோத செயல்களைப் புரிகின்றவர்களை பாராளுமன்றத்துக்கு கொண்டுவரவே எதிர்க்கட்சியினர் துடிக்கின்றனர். நாட்டை சீராக்குவது எப்படி? நாம் யார் என்பதை காட்டுகிறோம்”- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**




“இந்தியாவில் ஒரு கியூ. ஆர். கோட் மூலமாக வடை விற்பனை செய்யும் போது எமது நாட்டு மக்கள் 5 ஆயிரம் ரூபாயை வாங்கவும், பத்து கிலோ அரிசி வாங்கவும் அஸ்வெசும பெற்றுக்கொள்ளவும், காணிக்கான உறுதியை தயாரித்துக்கொள்ளவும் வரிசைகளில் நின்று அலைக்கழிய நேரிடுகின்றது. குறுகிய காலத்துக்குள் இவையனைத்தையும் முற்றாகவே மாற்றிய மைத்து பிரஜைகளுக்கு நெருக்கமான, வினைத் திறன்மிக்க அரச சேவையை உருவாக்குவோம்”

11

## அரச ஊழியர்களின் சம்பளம் ஜனவரியில் அதிகரிக்கப்படும்

### நேற்று அறிவித்தது அநுர அரசு

கொழும்பு, ஒக். 30

அரச ஊழியர்களுக்கான வேதனம் அடுத்த வருடம் முதல் அதிகரிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் நிலுவையிலுள்ள 5,000 ரூபாய்

11

## தபால் மூல வாக்களிப்பு இன்று ஆரம்பமாகிறது

கொழும்பு, ஒக். 30

எதிவரும் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது.

தபால் மூல வாக்காளர்கள் மாவட்ட செயலகங்கள், தேர்தல் பணிமனைகள், பொலிஸ்

11

## இமாம் அறிக்கையையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்

### நேற்று அறிவித்தது அரசு

கொழும்பு, ஒக். 30

ஈஸ்டர் தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதிபதி எஸ். ஐ. இமாம் தலைமையிலான குழுவின் அறிக்கையையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## பயங்கரவாத சட்டத்தை நீக்குவதா? புதிய அரசு அமைந்த பின்பே முடிவு!



### அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 30

புதிய பாராளுமன்றம் அமைக்கப்பட்டவுடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது அல்லது திருத்துவது தொடர்பான விடயத்தை அரசாங்கம் முன்னெடுக்க உத்தேசித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

11

## புதிதாக பணம் அச்சிடவில்லை!

### அமைச்சரவை பேச்சாளர்

கொழும்பு, ஒக். 30

சட்டத்தின் பிரகாரம் பணம் அச்சிட முடியாது எனவும் புதிதாக பணம் அச்சிடப்படுவதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மத்திய வங்கியால்

11

## வாகன இறக்குமதிக்கு அரசு பச்சைக்கொடி!

கொழும்பு, ஒக். 30

சில நடைமுறைகளுக்கு உட்பட்டு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

11

## அறுகம்குடா தாக்குதல் சதித் திட்டம்; இதுவரை 6 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஒக். 30

அறுகம்குடா உட்பட அதிக சுற்றுலா பயணிகள் கூடும் பகுதிகளை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டனர் என்று சந்தேகத்தின் அடிப்படையில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் மூலம் இந்த சதித் திட்டம் தொடர்பாக கைதானவர்களின் எண்ணிக்கை 6ஆக அதிகரித்துள்ளது.

கைதானவர்கள் அனைவரும் பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவின் பேரில், சந்தேகநபர்கள் 90 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

11




## காட்டு யானை தாக்கி இளைஞன் உயிரிழப்பு

வவுனியா, ஒக். 30

வவுனியா - செட்டிக்குளம் - கிறிஸ்தவகுளத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி 24 வயது இளைஞர் உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த இருவர் நேற்றுக் காலை காட்டுக்கு சென்றபோதே இந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது.

கிறிஸ்தவகுளம் பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் கேதீஸ்வரன் (வயது- 24) என்ற இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை பறயனாலங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)




உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## இப்படியும் நடக்கிறது

எனக்குத் தெரிந்த எழுத்தாளர் ஒருவர் இருந்தவர். அவர் ஏராளமான சிறுகதைகளை எழுதிக் குவித்தவர். அவரின் சிறுகதைகள் பெரும்பாலும் அவர் பார்த்த சம்பவங்கள், சமூகத்தில் நடக்கும் அநீதிகள் பற்றியே அதிகம் பேசுவதுண்டு.

அவரின் எழுத்துகளில் எப்போதும், தான் எதிர்கொண்ட ஒரு சம்பவத்தை எழுதுவதென்றால், அந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களையே தனது கதைகளில் பயன்படுத்திவிடுவார். இதனால் அவர் எதிர்கொண்ட பிரச்னைகள் ஏராளம். அதிகம் ஏன் பல உறவினர்களையே அவர் பகைக்க வேண்டி வந்தது.

அவர் புலமைப்பரிசில் பெற்று கிராமத்திலிருந்து யாழ்ப்பாணம் நகரத்திலுள்ள பிரபல கல்லூரியில் கல்வி கற்ற காலத்திலிருந்து, உயர்தரம் வரை அவரோடு கூடவே படித்தவர்களில் அவருக்கு மிக நெருக்கமானவர் ஒருவர். அவர் ஒரு சிறுபான்மைத் தமிழர்.

அவரும் உயர்தரம் வரை படித்துவிட்டு, அந்த எழுத்தாளரும் அவரின் நண்பரும் அரச உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தனர். அவரின் நண்பரோ வேறு ஒரு நகரில் 'செற்றில்' ஆகிவிட்டார். இவர் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிக்கொண்டே எழுத்துத்துறையிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

அவர் ஒரு கதையில் தனது அந்த உற்ற நண்பனுடன் நடந்த சம்பவம் ஒன்றை விபரித்தபோது, வழக்கம் போலவே அந்த நண்பரின் பெயரையும் பாவித்ததோடு, அவரின் சமூகம் பற்றியும் அந்தக் கதையில் பிரஸ்தாபித்திருந்தார்.

அந்தக் கதையால் அவரின் பால்ய நண்பனையே அவர் இழக்கவேண்டி வந்தது. காரணம் வேறு ஒன்றுமில்லை, அந்த நண்பர் இந்த எழுத்தாளர் தனது நண்பர் என்ற விடயத்தை தனது மனைவியிடமும் அடிக்கடி சொல்லி பெருமைப்படுவதுண்டு. அதனால் அவர் மனைவியும் அந்த எழுத்தாளரின் கதைகள் என்றால், அதனைத் தவறாது படித்து வந்திருக்கிறார். ஒரு கதையில் அவர் தனது கணவரைப் பற்றித்தான் எழுதியிருக்கிறார் என்பதை அவர் மனைவி அடையாளம் கண்டுகொண்ட பின்னர்தான், அவருக்கே தனது கணவர் எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்பது தெரியவந்தது. இதனால் அவர் குடும்பத்தில் களேபரம். அன்றிலிருந்து அந்த நண்பர்கள் இருவரும் எதிரிகளாகி விட்டனர்.

இந்தச் சம்பவம்தான் அந்த நண்பரின் கேள்வியை கேட்டதும் நினைவுக்கு வந்தது.

அந்த நண்பர் கேட்டார், "தமிழ் அரசு கட்சி ஒன்றுதானே, தமது வேட்பாளர்களில் இவர் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதை பகிரங்கமாக அறிவித்து, அவர்களை கேவலப்படுத்துகின்றது. அது எதனால் என்று நினைக்கின்றீர்கள்?"

அவரின் கேள்வி நியாயமானதுதான். ஆனால், அதற்கு பதில் சொல்லக்கூடிய நிலையில் நான் இருக்கவில்லை.

தமிழ் அரசு கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப காலங்களில் ஒரு சுலோகம் பயன்படுத்தப்பட்டு வந்ததை அவர்களின் எதிர்க்கட்சியான காங்கிரஸும் அப்போது யாழ்ப்பாணத்தில் மிகவும் பலம் வாய்ந்த கட்டமைப்புகளோடு இருந்த இடதுசாரி கட்சிகளின் தலைவர்களும் கூறி விமர்சிப்பதை நண்பருக்கு ஞாபகப்படுத்தினேன்.

"ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பது தவறில்லை", என்ற தமிழ் அரசு கட்சியின் அந்தக் கோஷம் இடதுசாரிகளால் விமர்சிக்கப்பட்டது. அதாவது ஆண்ட பரம்பரை என்று அவர்கள் சொல்ல வருவது, யாழப்பாண உயர் சமூகத்தைத்தான், அவர்கள் முன்னர் எப்படி தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களை 'ஆட்சி' செய்தார்களோ (நடத்தினார்களோ) அதேபோல மீண்டும் ஆளவே விரும்புகின்றார்கள் என்று கூறுவதுண்டு.

இடதுசாரிகளின் இந்த விமர்சனத்தையே நண்பருக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருந்தது.

தமிழ் அரசு கட்சியில் மட்டுமே இதுபோன்ற அறிவிப்புகள் விடுக்கப்படுவதுண்டு. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலோ அல்லது ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியிலோ போட்டியிடுகின்றவர்கள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது அந்த வேட்பாளர் பட்டியலில் இருப்பவர்களுக்கே தெரிந்திருக்குமோ தெரியவில்லை.

ஆனால், தமிழ் அரசில் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கப்படும் போதே, தாங்களும் ஒரு சிறுபான்மைத் தமிழரை வேட்பாளர் ஆக்கியிருக்கின்றோம் என்பதை பகிரங்கமாக அவர்கள் அறிவிக்கத் தவறுவதில்லை.

அதேபோலத்தான், பெண் வேட்பாளர்களையும் அவர்கள் தெரிவுசெய்வது வழக்கமாக இருந்து வருகின்றது. தங்கள் பட்டியலில் பெண் வேட்பாளர்களும் இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்வதற்காக சேர்க்கப்படுகின்றார்களே தவிர, அவர்களை வெற்றிபெற வைக்க வேண்டும் என்று நினைப்பதில்லை.

இந்த நிலைமை தமிழ் அரசு கட்சியில் மாத்திரம் இருப்பதாகவும் கூறிவிட முடியாது. அநேகமாக எல்லாத் தமிழ் கட்சிகளிலுமே இந்த நிலைமை தொடரவே செய்கின்றது.

எந்தக் கட்சியுமே, தமது தேர்தல் பிரசாரங்களின்போது, தமக்கு வாக்களிக்கின்ற பெண் வாக்காளர்கள் தமது வேட்பாளர் பட்டியலில் இருக்கும் பெண் வேட்பாளருக்கு தங்கள் விருப்பு வாக்குகளில் ஒன்றை வழங்க வேண்டும் என்று பகிரங்கமாகக் கோரிக்கை வைப்பதில்லை. அப்படி வைத்தால், சிலவேளைகளில் பெண்கள் தெரிவாவதற்கு சந்தர்ப்பம் ஏற்படலாம்.

- ஊர்க்குருவி

## வட்டுக்கோட்டை விபத்தில் ஒருவர் படுகாயம்!



யாழ்ப்பாணம், ஒக். 30

காரும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டையில் இந்த விபத்து இடம்பெற்றது. யாழ்ப்பாண கல்லூரியிலிருந்து சங்கரத்தை பக்கமாக 200 மீற்றர் தூரத்தில் மருத்துவர் ஒருவரின் காரும் மோட்டார் சைக்கிளும் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து குறித்து விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

## யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு நீரிழிவு குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 30

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ். போதனா மருத்துவமனையின் நீரிழிவு சிகிச்சை பிரிவினரும் யாழ்ப்பாணம் நீரிழிவு கழகத்தினரும் இணைந்து முன்னெடுத்த நீரிழிவு விழிப்பூட்டல் செயலமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ். நீரிழிவு கழக செயலாளர் க.கணபதி தலைமையில் நடைபெற்ற விழிப்பூட்டல் செயலமர்வில், 'நீரிழிவு வராதிருக்க கடைப்பிடிக்க வேண்டிய உணவு கட்டுப்பாடுகள்' குறித்து யாழ். பல்கலைக் கழக கல்லூரி பணிப்பாளர் மருத்துவர் விஜிதா விளக்கமளித்தார்.

தொடர்ந்து, 'நீரிழிவால் ஏற்படும் பாதிப்புக்களும் அதனை தடுப்பதற்கான வழிவகைகள்' பற்றியும் யாழ். போதனா மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் அரவிந்தன் சிறப்புரை ஆற்றினார்.

இந்தநிகழ்வில் கல்லூரியின்அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் யாழ்ப்பாணம் நீரிழிவு கழகத்தினர் கலந்து கொண்டனர். (ஐ)


யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பாராளுமன்ற தேர்தல் 2024

தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடல்

எமது ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய தேர்தல் விஞ்ஞாபனம் தீப ஒளித்திருநாள், **தீபாவளி** அன்று **(வியாழக்கிழமை, ஐப்பசி 31)** யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டங்களில் உள்ள ஐந்து இடங்களில் வெளியிடப்பட இருக்கின்றது.

| பகுதி | நேரம் | இடம் |
|---|---|---|
| காரைநகர் | காலை 8 மணி | வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம் முன்பாக |
| யாழ்ப்பாணம் | காலை 10 மணி | நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக |
| வடமராட்சி | பிற்பகல் 1 மணி | பொற்பதி புனித இராஜப்பர் ஆலயம் முன்பாக |
| தென்மராட்சி | மாலை 3 மணி | சாவகச்சேரி நகர பேருந்து நிலையம் முன்பாக |
| கிளிநொச்சி | மாலை 6 மணி | கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக |

நீதி மற்றும் நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, நமது சமூகத்தின் முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கின்றோம். மக்கள் நலனுக்காக உருவாக்கப்பட்ட எங்கள் கொள்கைகள் மற்றும் திட்டங்கள், எதிர்கால தலைமுறைக்கான உறுதிப்பாடுகளை உள்ளடக்குகிறது.


உங்கள் ஆதரவு, எங்களின் முயற்சிகள் வெற்றியடைய வழிகாட்டும் ஒளியாகும்!

நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு! இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

மாற்றத்திற்கான நம்பிக்கை...

சுயேச்சைக் குழு - 2

ஊஞ்சல் சின்னம்



4

E.S.P நாகரத்தினம் கமலரூபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LLB (Hons), BA (Economics) (University of Colombo)



களத்தில் கமல்
2024 எமக்கான நேரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
30.10.2024 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் பதவிகளை வகிப்போரின் அநாவசிய சலுகைகளும் வசதிகளும்

மக்களால் தெரிவு செய்யப்படும் பதவிகளை வகிப்பவர்கள் மக்களின் வரிப் பணத்தில் வசதிகளை அனுபவிக்கக்கூடாது என்ற நம்பிக்கையை கொண்டவர் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க. முன்னாள் ஜனாதிபதிகள் அரசாங்க செலவில் அனுபவிக்கும் வாசஸ்தலம், வாகனங்கள், பாதுகாப்பு உட்பட சிறப்பு வசதிகளையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனுபவிக்கும் தீர்வையற்ற வாகன இறக்குமதி சலுகை உட்பட பல்வேறு சலுகைகளையும் இல்லாமல் செய்யப்போவதாக திஸநாயக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களிலும் கூறினார். தற்போது பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களிலும் அவர் அதை கூறுகிறார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க என்று இலங்கையில் இன்று ஐந்து முன்னாள் ஜனாதிபதிகள் இருக்கிறார்கள். இவர்களில் எவருமே தங்கள் சொந்தத்தில் வசதி வாய்ப்புகளுடன் வாழமுடியாதவர்கள் அல்லர். என்றாலும் அரசாங்கத்திடமிருந்து மேலும் வசதி வாய்ப்புகளைக் கூடுதலாக எதிர்பார்க்கிறார்களே தவிர, தற்போது அனுபவிப்பவற்றில் எந்த ஒன்றையும் கைவிடுவதற்குத் தயாராக இல்லை.

இவர்களுக்கான இந்த வசதிகள் சட்டரீதியாக உறுதி செய்யப்பட்டவையாகும். முன்னாள் ஜனாதிபதிகள் இறந்தால் அவர்களின் வாழ்க்கைத் துணைகளுக்கும் அதே வசதி வாய்ப்புகள் அரசாங்க செலவில் கிடைக்கின்றன. இன்று அவ்வாறாக மறைந்த ஜனாதிபதியின் வாழ்க்கைத் துணை என்று காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாஸவின் மனைவி ஹேமா பிரேமதாஸவே அரசாங்க செலவில் வசதிகளை அனுபவிக்கிறார்.

அரசியலில் ஊழல் முறைகேடுகள் பெருகுவதற்கான பிரதான காரணங்களில் ஒன்று மக்கள் பிரதிநிதிகள் என்று கூறப்படுபவர்களால் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும் சிறப்பு சலுகைகளும் வசதிகளுமாகும். அத்துடன், குறுகிய காலத்துக்குள் சொத்துகளை குவிப்பதற்கான ஒரு சுலபமான மார்க்கமாகவும் அரசியல் விளங்குகிறது. முன்னைய காலத்தைப் போலன்றி தற்போது தேர்தல்களில் போட்டியிடுவதற்கு முண்டியடிக்கிறார்கள்.

இன்றைய அரசியல்வாதிகளில் குறைந்தபட்சம் ஒரு பத்து வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களின் முன்னைய வாழ்க்கை முறையையும் தற்போதைய வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு நோக்கினால் அவர்கள் அரசியலை எதற்கு பயன்படுத்தினார்கள் என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். ஓர் அரசாங்க ஊழியர் ஒரு கண்ணியமான ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு குறைந்தது 25 வருடங்களாவது பணியாற்றியிருக்க வேண்டும். ஆனால், ஐந்து வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து விட்டால் போதும் அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களைத் தங்களுக்கு சேவை செய்வதற்காகவே மக்கள் தேர்தல்களில் தெரிவுசெய்கிறார்கள். அதே பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சபையின் கூட்டங்களில் பங்கேற்பதற்கு தினமும் விசேட கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. தங்களது கடமைகளைச் செய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு போக்குவரத்து உட்பட பல்வேறு தேவைகளுக்கு பணம் தேவைப்படுகிறது. ஆனால், அதற்காக சிறப்பு சலுகைகள், வசதிகள் என்று அவர்கள் அனுபவிக்கின்ற சொகுசுகளை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு பொறுப்பானவர்கள் என்று உயர் நீதிமன்றத்தால் கூறப்பட்ட மூன்று ராஜபக்ஷ சகோதரர்களில் இருவர் முன்னாள் ஜனாதிபதிகள். திருமதி குமாரதுங்கவும் மைத்திரிபால சிறிசேனவும்கூட வெவ்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்களே. நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்களையும் நீதின்றங்களால் குற்றவாளிகளாக காணப்பட்டவர்களையும் அவர்களின் தவறான ஆட்சிக்கு பின்னரும்கூட அரசாங்க செலவில் பராமரிப்பதைப் போன்ற கேலிக்கூத்து வேறு எதுவும் இருக்கிறதா?

அரசியல் பதவிகளை வகிப்பவர்கள் அனுபவிக்கும் அநாவசியமான சிறப்பு சலுகைகளையும் வசதி வாய்ப்புகளையும் பெருமளவு குறைப்பதற்கான சட்டமூலம் அடுத்த பாராளுமன்றத்தில் அவசரமாகக் கொண்டுவரப்பட வேண்டும். ஊழல் அரசியல் கலாசாரத்தை ஒழிப்பதை நோக்கிய முதற்படியாக அது நிச்சயமாக அமையும்.

## சிவில் சமூக கட்டமைப்பினருடன் ஓ. எம். பியினர் கலந்துரையாடல்

மன்னார், ஒக். 30

காணாமல் போன ஆட்கள் பற்றிய பணிமனை உத்தியோகத்தர்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக கட்டமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

காணாமல் போன ஆட்கள் பற்றிய பணிமனைக்கும் அது தொடர்பாக வேலை செய்யும் சிவில் சமூக அமைப்புகளுக்கும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கும் இடையே உள்ள தொடர்பை வலுப்படுத்தி அந்த வலுப்படுத்துதல் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப பிரதிநிதிகளுக்கு உதவி செய்யும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறிப்பாக அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் குறித்து இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை ஏதும் முன்வைக்கப்படவில்லை என கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் சுமார் 300 வரையிலான நபர்களுடைய படங்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட விதம் தொடர்பில் ஆவணமாக தயாரிக்கப்பட்ட புத்தகமொன்று சர்வதேச நிறுவனம் உட்பட பலரிடம் கையளிக்கப்பட்டுள்ளமை குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், காணாமல் போனோர் தொடர்பான பணிமனையின் ஆணையாளர் யோகராஜா, காணாமல் போன ஆட்கள் பற்றிய பணிமனை உத்தியோகத்தர்கள் மற்றும் மன்னார் பிராந்திய பணிமனையின் உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பு உள்ளூர் விற்பனை சந்தை



வடமராட்சி, ஒக். 30

உள்ளூர் விற்பனை சந்தை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் நோக்கில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த விற்பனை சந்தையை பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த சந்தையில் உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனைக் கண்காட்சி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு பொருட்களின் தரம் பற்றியும் விற்பனையாளர்களால் நுகர்வோருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

அதிகளவான மக்கள் வருகை தந்து இந்த சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்து சென்றனர். (ஐ- 05)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 30

சிறுப்பிட்டி வடக்கு, மாதியந்தனை இலுப்பையடி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த கேதார கௌரி உற்சவகால சிறப்புச் சொற்பொழிவு ஆலய பிரதான மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

இதில், இளம்சைவப்புலவர் க. கயிலைவாசன் 'கேதார கௌரி விரத மகிமை' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஐ)

❖ ❖ ❖ ❖

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தம் திருவாசக சொற்பொழிவு நடைபெறுகிறது.

இந்த வரிசையில் 29 சொற்பொழிவு தொடர் பன்னாலை சிவபூதவராயர் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.
மாணிக்கவாசகர் சுவாமிகள் குரு பூசையைத் தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப்புலவர் க. கயிலைவாசன் 'மாணிக்கவாசகரும் அருட்பத்தும்' என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)


## மந்திகை விபத்தில் மூன்று பேர் காயம்

வடமராட்சி, ஒக். 30

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் மூன்று இளைஞர்கள் காயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பருத்தித்துறையிலிருந்தும் மந்திகையிலிருந்தும் பயணித்த மோட்டார் சைக்கிள்களே நேருக்கு நேர் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 26 புதன்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 13
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : அதிதி




**மேடம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். பலநாளாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். புது வேலை அமையும். அமோகமான நாள்.

**இடபம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றி நல்லவர்கள், கெட்டவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்தருவீர்கள். முடிக்கும் நாள்.

**மிதுனம்**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். பயணங்கள் திருப்திகரமாக அமையும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.வாய்ப்புகள் தேடி வரும்.

**கடகம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பழைய சொந்தம் தேடி வருவார்கள். சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

**சிம்மம்**
இங்கிதமான பேச்சால் கவருவீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் கிடைக்கும். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சில வேலைகளை உடனே முடிக்க வேண்டுமென்று நினைப்பீர்கள்.

**துலாம்**
எதையும் திட்டமிட்டு செய்ய பாருங்கள். பிள்ளைகளைப் பற்றிய கவலைகள் வந்து போகும். பழைய கடன் பிரச்னை அவ்வப்போது மனசை வாட்டும். உடல் நிலை பாதிக்கும்.

**விருச்சிகம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். சேமிப்பில் கவனம் தேவை. வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தை பெருக்குவீர்கள். இனிமையான நாள்.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அக்கறை காட்டுவார்கள். உங்களை தவறாக நினைத்துக் கொண்டிருந்தவர்கள் மனசு மாறும். மகிழ்ச்சி பெருகும் நாள்.

**மகரம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். புது ஏஜென்சி எடுப்பீர்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். கடினமாக உழைக்க வேண்டிய நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்துபோகும். தாயாரின் உடல் நிலை சீராகும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். நட்பு வட்டம் விரியும். நிம்மதி உண்டாகும் நாள்.

# வவுனியாவில் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஒக். 30

வவுனியா, செட்டிக்குளம் - அரசடிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் தரம் 03 வகுப்புக்கு கடந்த 10 மாதங்களாக ஆசிரியர் நியமிக்கப்படாமையால் மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளதாக தெரிவித்து பெற்றோர்கள் மற்றும் மாணவர்களால் பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய், வேண்டும் வேண்டும் ஆசிரியர் வேண்டும், வலயமே கண் கொண்டு திரும்பிப்பார் போன்ற பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்ணொருவர் தெரிவிக்கையில்,

கடந்த 10 மாதங்களாக ஆசிரியர் இல்லாமலே குறித்த வகுப்பறை இயங்கி வருகின் றது. இதன் காரணமாக தங்களின் பிள்ளைகளின் கல்வி மட்டம் குறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் தனது பிள்ளையின் பயிற்சி புத்தகமானது பெப்ரவரி மாதத்தில் இருந்து திருத்தப்படாத நிலையில் இது தொடர் பில் குறித்த பாடசாலை அதிபரிடம் சென்று கூறியதோடு தனது பிள்ளையை வேறு பாடசா லைக்கு மாற்றுவது தொடர்பில் பேசியதாகவும் அப்போது குறித்த பாடசாலையின் அதிபர் வலயத்துக்கு சென்று குறித்த வகுப்பில் ஆசிரியர் இன்மையால் பாடசாலையை மாற்ற வுள்ளோம் என்று கூறுங்கள் என்று தெரிவித்தார்- இவ்வாறு அந்தப் பெண் கூறினார்.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டம் சுமார் இரண்டு மணித்தியாலத்துக்கு மேலாகியும் தீர்வு கிடைக்காத நிலையில் குறித்த வகுப்புக்கு ஆசிரியரை நியமிக்கும் வரை தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில்லை என பெற்றோர் தெரிவித்து கலைந்து சென்றனர். (எ)

# 3 கடல் ஆமைகளுடன் மீனவர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 30

இளவாலை - சேந்தான்குளம் பகுதியில் மூன்று கடல் ஆமைகளுடன் மீனவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸா ருக்கு கிடைத்த இரகசிய தகவ லின் அடிப்படையில் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர் இளவாலை சேந் தான்குளம் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவரென பொலிஸார் குறிப்பிட்டனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ)

# கரணவாய் கிழக்கு பகுதியில் ஜே. சி. பி. வாகனம் தீக்கிரை!

## நெல்லியடி பொலிஸார் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக். 30

வடமராட்சி கரணவாய் கிழக்கு குருக்கள் குடியிருப்புப் பகுதியில் வீதியோரம் நிறுத்தப் பட்டிருந்த ஜே. சி. பி. வாகனம் ஒன்று தீக்கிரையாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்றது.

ஜே. சி. பி. வாகனம் தீப்பற்றி எரிந்ததை அவதானித்த அயல வர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற நெல்லியடி பொலிஸார், அயலவர்களின் உதவியுடன் தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்தில் ஜே. சி. பி வாகனம் முற்றாக சேதமடைந்தது.

சம்பவம் தொடர்பில் வாகன உரிமையாளரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட் டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஒக். 30

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நேற்றுக் காலை முதல் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம்மீது தாக்குதல் நடத்தப் படப்போவதாக பொலிஸாரின் தொலைபேசிக்கு எடுக்கப்பட்ட அநாமதேய அழைப்புக்கமைய பாதுகாப்பு வழங்கப்பட்டுள் ளது.தொடர்ந்து கடும் சோதனைகளுக்கு பின்னரே நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்க பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர். (எ)

# ஓ. எம். பி. அலுவலக ஏற்பாட்டில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக். 30

காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோருக்கிடையிலான

களின் பிரதிநிதிகளுக்கு இடையில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர்களான தியாகராஜா யோகராஜா, அர்பா தாசிம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் செயல்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது இடங்களில் இலவச வைபை பயன்படுத்துவோர் மிகஅவதானம்!

## தனிப்பட்ட தகவல்கள் திருடப்படும் அபாயம்

கொழும்பு, ஒக். 30

**பொது இடங்களில் இலவச வைபை(Wi-Fi) பயன்படுத்தும்போது மக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என இலங்கை கணினி அவசர பதில் மன்றம் தெரிவித்துள்ளது.**

அவ்வாறான இடங்களில் வைபை பயன்படுத்தும்போது தனிப்பட்ட தகவல்கள் திருடப்படுவது தொடர்பாக மன்றத்திற்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அதன் தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த தெரிவித்தார்.

எனவே, பொது இடங்களில் இலவச வைபை பயன்படுத்தி இணைய வேலை செய்யும் போது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கூறினார்.

இலவச வைபை சேவைகளுடன், பிறர் போலியான வைபை சேவைகளை வழங்கலாம் மற்றும் சேவையின் மூலம் தங்கள் சேவைகளை வழங்க பொது மக்களை வழிநடத்தலாம். பின்னர் அணுகல் கடவுச்சொற்கள் மற்றும் பிற அனைத்து தகவல்களையும் திருடலாம். அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை அணுகலாம் மற்றும் எந்த நேரத்திலும் எந்த கணக்கியல் பணியையும் செய்யலாம் என்றும் அவர் கூறினார். (அ)

# 68,000 ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்

கொழும்பு, ஒக். 30

ரஷ்யாவுக்கு சொந்தமான ரெட்விங் எயார் லைன்சில், 68 ஆயிரம் ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என, ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முதல், ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் வருகை தருவர்.

மொஸ்கோ உட்பட 6 ரஷ்ய நகரங்களில் இருந்து, வாரத்துக்கு ஆறு விமானங்கள், இலங்கைக்கு வருகை தரவுள்ளன.

எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி வரை, இந்த விமானங்கள், அம்பாந்தோட்டை விமான நிலையத்துக்கு வருகை தரவுள்ளன.

இவ்வாறு வருகை தரும் 68 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் மூலம், இலங்கைக்கு 102 மில்லியன் டொலர் கிடைக்கும்.

2022 இல், ரெட்விங்ஸ் மூலம், 94 ஆயிரத்து 795 சுற்றுலாப் பயணிகளை, எனது காலப்பகுதியில் ரஷ்யாவில் இருந்து கொண்டுவந்தேன்.

மத்தல விமான நிலையம் ஊடாக இலங்கை வந்த இவர்கள் மூலம், 150 மில்லியன் டொலர் வருமானம் கிடைத்தது.

நான் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டுள்ளேன்.

அந்தவகையில், 9 வருட கால அரசியல் பழிவாங்கலை முடிவுக்கு கொண்டுவர வேண்டிய நேரம் இது-என்றார். (அ)

# இலங்கையின் பாதுகாப்பு குறித்து சர்வதேசத்தின் நம்பிக்கை வீழ்ச்சி

## பிரமித்த பண்டார தென்னக்கோன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 30

இலங்கையின் பாதுகாப்பு குறித்து சர்வதேசத்தின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் கடந்த அரசாங்கத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக கடமையாற்றியபோது பாதுகாப்பு தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தினேன்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய சுவிட்ஸர்லாந்தில் இருப்பது போலத்தான் பேசிக்கொண்டிருக்கிறார்.

நாட்டில் ஏதேனும் பாதுகாப்பு பிரச்னை ஏற்படுமாயின் அதற்கு தற்போதைய அரசாங்கமே பொறுப்புக் கூறவேண்டும்.

அறுகம்குடா பகுதியில் தாக் குதல் நடத்தப்படவுள்ளதாக அமெரிக்கா முதலில் அறிவித்தது. அதுவரை எமது பாதுகாப்புத் தரப்பினர் அதனை அறிந்திருக்கவில்லை. எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொண்டிருக்கவில்லை. ஆயினும் தமக்கு ஏற்கனவே தகவல் தெரிந்திருந்ததாக ஜனாதிபதியும் அமைச்சர்களும் கூறுகின்றனர்.

அவ்வாறாயின் ஏன் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவில்லை? புலனாய்வுத் துறையினர் உள்ளிட்ட பாதுகாப்புத் தரப்பினர் சோர்வாக காணப்படுகின்றனர். அவர்களுக்கு அரசாங்கம் மீது நம்பிக்கையீனம் காணப்படுகிறது-என்றார். (அ)

# டெங்கு பரவல் தீவிரம்

கொழும்பு, ஒக். 30

நாட்டில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், 2024 இன் இது வரையான காலப்பகுதி வரை, 41 ஆயிரத்து 866 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தவகையில், அதிகளவான டெங்கு நோயாளர்கள், மேல் மாகாணத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து, அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதி வரை, 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# எல்பிட்டி தேர்தல் முடிவுகள் போன்றே பொதுத்தேர்தல் முடிவுகளும் அமையும்!

## அக்மீமன தயாரத்ன தேரர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 30

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் முடிவுகளை ஒத்த முடிவுகளே பொதுத்தேர்தலிலும் கிடைக்கப்பெறப்போவதாக லங்கா ஜனதா கட்சியின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் ஆளும் கட்சி அதிக வாக்குகளை பெறும் என்ற எதிர்பார்ப்பு எமக்கு இருந்தது. ஆனால் தற்போது வாக்கின் முடிவுகளை எடுத்து நோக்கம் போது தேசிய மக்கள் சக்திக்கு 15 ஆசனங்களும், எதிர்கட்சிகளுக்கு 15 ஆசனங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்வாறு நோக்கும் போது பாராளுமன்ற தேர்தலின் முடிவுகளும் இவ்வாறாகவே அமையப்பெற உள்ளமை தெளிவாகின்றது.

அந்த வகையில் நோக்கும் போது எவர் மீதும் இது வரையில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதே தென்படுகின்றது. திசைகாட்டியினருக்கு வாக்களித்து அவர்களை ஜனாதிபதி ஆசனத்தில் அமர செய்தாலும் கூட மக்களுக்கு அதில் பெரும் மகிழ்ச்சியளிக்கும் விடயம் இடம் பெற்றிருப்பதாக தெரியவில்லை. புதிய குழுவொன்று வேண்டும் எனவே மக்கள் எண்ணுகின்றனர் -என்றார். (அ)

# தேசிய கொள்முதல் ஆணைக்குழுவை பலப்படுத்த முறையான திட்டம் தேவை

## ஜனாதிபதி அனுரகுமார வலியுறுத்து

கொழும்பு, ஒக். 30

தேசிய கொள்முதல் ஆணைக்குழுவை பலப்படுத்துவதற்கான முறையான திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய கொள்முதல் சட்டம் மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் இதன் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விரிவாக கலந்துரையாடினார்.


அரசாங்கத்தின் மூலதனச் செலவுகள் உட்பட அனைத்து செலவினங்களில் சுமார் 60 சதவீதமானவை முறையான கொள்முதல் செயல்முறைக்கு உட்படுத்தப்படவேண்டும் என்றும், இருப்பினும் மேற்படி கொள்முதல் செயல்பாட்டில் உள்ள குறைபாடுகள் காரணமாக, அரசாங்கத்திற்கு பாரிய நட்டம் ஏற்படுவதாகவும் தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர்.

இதன் காரணமாக மோசடி மற்றும் ஊழலுக்கு அதிக வாய்ப்பு உள்ளதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர்.

கொள்முதல் செயல்பாட்டில் ஏற்படக்கூடிய தாமதங்கள், வெளிப்படைத்தன்மையற்ற நடைமுறைகள் மற்றும் செயல்திறன் இன்மை குறித்தும் இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

முதலீட்டாளரால் தானாக முன்வந்து சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள் மற்றும் அரச தனியார் பங்காளித்துவத்தின் கீழ் கொள்முதல் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகளை குறைப்பது குறித்தும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்தி கொள்முதல் திட்டங்களை முறைமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி அநுரகுமார அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தி என்பது மாற்றம் பெற்ற அமைப்பல்ல!

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

மன்னார், ஒக் 30

**நாட்டில் யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களில் இடம் பெற்ற தமிழ் மக்களின் போராட்டங்களில் ஒன்றிலாவது ஜே.வி.பி பங்கேற்றுள்ளதா என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப் பியுள்ளார்.**



தேசிய மக்கள் சக்தி என்பது உண்மையில் மாற்றம் பெற்ற அமைப்பல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நேற்று முன் தினம்மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒற்றையாட்சி அரசியல மைப்பை மக்கள் நிராகரிப்ப தாக இருந்தால் அதை நிராக ரிக்கக் கூடிய, செயல்படுத்தக் கூடிய ஒரு அணியாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி உள் ளது எனவும் அவர் கூறினார்.

# ஐந்து பிரதிநிதிகளை கிழக்கில் பெறுவோம்!

அம்பாறை, ஒக். 30

“எமது தலைவர் பிள்ளை யான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கிழக்கு மாகாணத்தில் இம் முறை 5 பாராளுமன்ற உறுப்பினர்களை நிச்சயமாக பெறும்.இதில் சந்தேகமேயில்லை.”

-இவ்வாறு தமிழ் மக்கள் விடு தலை புலிகள் கட்சியின் அம் பாறை மாவட்ட முதன்மை வேட் பாளர் பொறியியலாளர் தேவ ராஜன் சர்வானந்தன் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பேரினவாத கட்சிகளை விட தமிழ்க் கட்சியே எமது தெரி வாக இருக்கவேண்டும். அதிலும் கிழக்கு தலைமையைக் கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் கட்சி தான் எங்களுக்கு உரிய ஒரே தெரிவு. எமது தலைவர் பிள்ளையான் மிகவும் ஆளுமை யானவர். எமக்கு உறுதுணை யாக இருப்பார்.

இதை உணராவிட்டால் கிழக்கு மக்கள் தலையில் மண்ணை அள்ளிப்போட்ட நிலைமைதான் உருவாகும்.

இம்முறை அம்பாறை, திரு கோணமலை போன்ற பகுதிக ளிலும் போட்டியிடுகின்றோம்.

சில தமிழ்க் கட்சிகள் சீசனுக்கு வந்து செல்லும் கட்சியாக இருக் கின்றன. அவர்களை நம்ப வேண் டாம்

எமது கட்சியில் கிழக்கு மாகாணத்தில் 25 பேர் போட்டி யிடுகிறார்கள். அதில் நாங்கள் ஐந்து பேர் கட்டாயம் வெற்றி அடைவோம்-என்றார். (அ)

# தாயகத்தில் தமிழர் இல்லாமல் தமிழ் தேசியம் சாத்தியமாகாது

யாழ்ப்பாணம், ஒக். 30

தமிழர்கள் இல்லாமல் தமிழ்த் தேசியம் சாத்தியமாகாது. அவ்வாறு இருக்கையில் தமிழர் தாயகத்தில் தமிழர்களை இல் லாமல் செய்து விட்டு பிரான்ஸி லும் கனடாவிலுமா தமிழ்த்தே சியத்தைப் பேசப்போகின்றனர் என அங்கஜன் இராமநாதன் கேள்வியெழுப்பியுள்ளார்.

தென்மராட்சி - நாவற்குழிப் பிரதேசத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

அழிவுப்பாதையை நோக்கி தமிழ் மக்கள் இட்டுச் செல்லப் படுகின்றனர். இதனை எம் மக் கள் உணர வேண்டும். எம் மக் களை இவ்வளவு காலமாக வழி நடத்திய தமிழ்த்தேசிய வாதி கள் சாதித்தது என்ன?

எம் மக்கள் தொகையை பெருமளவு குறைத்தது தான் அவர்கள் செய்த ஒரே சாதனை. 70 வருடங்களாக போராடி உயிர்களை உடைமைகளை பல தலைமுறைகளின் எதிர்கா லத்தை இழந்தது எமது சொந்த நாட்டில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்வதற்கா கத் தானா?

தமிழர் இன்றி தமிழ்த் தேசி யம் சாத்தியப்படாது. யாழ்ப் பாண தேர்தல் மாவட்டத்தில் 9ஆக இருந்த பாராளுமன்ற பிர திநிதித்துவம் தற்போது 6ஆக குறைவடைந்துள்ளது.

இந்த ஆறு மூன்றாக குறைவ டைய வெகு காலம் தேவைப்ப டாது. ஏன் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்?

தாமே ஏகப்பிரதிநிதிகள் என கூறிக்கொண்டு இத்தனை கால மாக வென்ற தமிழ்த்தேசியவா திகள் மக்களை வாழ வைப்பதற் காக எதையாவது செய்தார்களா? மக்களின் அடிப்படை தேவை கள், பொருளாதார விருத்திக் காக என்ன திட்டங்களை செய் தார்கள்?

எனவே மக்கள் இந்தத் தேர் தலில் தேடலுடனும் தெளிவுட னும் வாக்களிக்காவிட்டால் அடுத்த ஐந்து வருடங்களில் மேலும் பல இழப்புக்களைச் சந்திக்க நேரிடும்-என்றார். (அ)

# தமிழரசிலேயே என் அரசியல் பயணம் தொடரும் ஒருபோதும் கட்சியிலிருந்து வெளியேறமாட்டேன்

**முன்னாள் எம்.பி சிறிதரன் உறுதி**

யாழ்ப்பாணம், ஒக். 30

அரசியல் ரீதியான அழுத்தங் களும், நெருக்கடிகளும் நிறைந் திருக்கும் சமகாலத்தில், அவை அனைத்தையும் எதிர்கொண் வாறு எனது அரசியற் பயணத்தை தமிழரசுக் கட்சியில் இருந்தவாறு தொடர்வதைப் போலவே, இனி வரும் காலங்களிலும் எனது பயணம் அமையும். கட்சியை விட்டு நான் ஒருபோதும் வெளி யேறமாட்டேன் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள பாராளு மன்றத் தேர்தலில் சிறிதரனுக்கு ஆதரவளிக்கும் வகையில் வட் டுக்கோட்டைத் தொகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத் தில் கலந்துகொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, கட்சி ரீதியாக வும், தனிநபராகவும் என்னை ஆத்மார்த்தமாக நேசிக்கும் மக் களின் நியாயபூர்வமான கேள்வி கள் உட்கட்சி முரண்நிலைகள் குறித்தே அமைந்திருக்கின்றன. கட்சிக்கு எதிராகவும் தெரிவு செய்யப்பட்ட தலைவராக நான் செயற்படமுடியாதவாறும் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுள் ளதை சுட்டிக்காட்டும் பலர், கட்சியைவிட்டு வெளியேறியி ருக்கலாம் என்ற கருத்துகளை முன்வைக்கிறார்கள். அதே வேளை, என்னை கட்சியைவிட்டு வெளியேற்றும் கைங்கரியங்கள் முன்னெடுக்கப்படலாம் என் றும் எதிர்வு கூறுகிறார்கள்.

என்னையும், எனது தலை மைத்துவத்தையும் நேசிக்கின்ற - விசுவாசிக்கின்ற எனது மக்க ளுக்கு நான் சொல்ல விரும்பு வது ஒன்றுதான். எந்தச் சூழ்நி லையிலும் நான் தமிழரசுக் கட் சியை விட்டு வெளியேறப்போ வதில்லை. என்மீதான காழ்ப்பு ணர்ச்சியிலும், தமது தனிப்பட்ட இயலாமைகளின் அடிப்படை யிலும் என்னை யாரும் எமது கட்சியிலிருந்து வெளியேற்ற வும் முடியாது. தடைகள் அனைத்தையும் தாண்டி, எமது மக்கள் விரும்புகின்ற, அவர்க ளது மனதறிந்த மக்கள் பிரதிநி தியாக எனது அரசியற்பயணம் தமிழரசுக் கட்சியிலேயே தொட ரும் என்பதை, தமிழீழப் பிரக டனம் நிறைவேற்றப்பட்ட வர லாற்று மண்ணான வட்டுக் கோட்டையில் வைத்து உறுதி யோடு உரைக்கிறேன் - என்றார்.

# தும்புத்தடியை நிறுத்தினாலும் வெற்றி என்ற மடமைத்தன சிந்தனை மலையேறிவிட்டது!

**வேட்பாளர் பிரகாஷ் கூறுகிறார்**

அம்பாறை, ஒக். 30

“இலங்கை தமிழரசுக் கட்சி யில் தும்பு தடியை நிறுத்தினா லும் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற மடைத்தனமான சிந்தனை இன்று மலையேறிவிட்டது. இம்முறை தேர்தல் அதற்கு சாட்சி பகரும்.”

-இவ்வாறு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் இராஜகுமார் பிரகாஷ் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்.

தந்தை செல்வநாயகம் விதைத்த தமிழ் தமிழ் தேசியம் இன்னும் எங்களது உள்ளத்தில் ஏக்கத்துடன் காணப்படுகின்றது. நாங்கள் அக்கட்சியை விமர் சிக்கவில்லை. ஆனால் அதில் உள்ள ஓரிரு தலைவர்களின் செயல்பாடு தான் இன்று அது இந்த அளவு மோசமாக நிலை மைக்கு போனதுக்கு காரணம். ஒரு சிலரது தலைக்கனம், ஆண வம் உடைக்கப்படவேண்டும். பழைய தரமான தலைவர்கள் ஒதுங்கிவிட்டார்கள். தகைமை யான தரமான தலைவர்கள் இன் றில்லை.

நாங்கள் அம்பாறை மாவட் டத்தில் ஒற்றுமையாக நின்றால் தான் ஒரு பிரதிநிதித்துவத்தை பெறலாம் என்று காலில் விழாத குறையாக கேட்டோம். எந்த சங்கும் தேவை இல்லை. வீடு தேவை இல்லை. ஒரு பொதுச் சின்னத்தில் வாருங்கள் என்று எல்லாரும் கேட்டோம். ஆனால் அவர்கள் மசியவில்லை. ஒரு சிலரின் சர்வாதிகாரி போக்கு தான் இன்று இங்கு இரண்டு அணியாக பிரிந்த காரணம்.

நாங்கள் எட்டு மாவட்டங்க ளிலும் ஒற்றுமையாக பயணிக் கின்றோம். எங்களுக்குள் ஏழு கட்சிகள் இருக்கின்றன. ஆனால் எந்தவித பிளவும் இல்லை. பிரி வும் இல்லை.

ஆனால் இன்று தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் தனித்து வெட்டியோடுகிறார்கள். அவர் களுள் போட்டியும் பொறாமை யும் தான் கூடுதலாக இருக்கின் றது-என்றார். (அ)

பாராளுமன்ற தேர்தல் 2024
வன்னி தேர்தல் தொகுதி


வலிகளை வரிகளாய் -
எழுதுவதாயின் வலிகளாய்
வாழ்ந்திருப்பவளால் மட்டுமே
வரியமைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு ஆட்சியை கைவிட்டு சென்றால் நாட்டை பொறுப்பேற்கும் எங்கள் அணி

## கூறுகிறார் ருவான் விஜயவர்த்தன

**கொழும்பு, ஒக். 30**

**அரசாங்கம் ஆட்சியை கைவிட்டுச் செல்லும் நிலை ஏற்பட்டால், நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியுமான அணியொன்று பாராளுமன்றத்தில் இருக்கவேண்டும். அவ்வாறான அனுபவமுள்ளவர்களை புதிய ஜனநாயக முன்னணி வேட்பாளர்களாக களமிறக்கி இருக்கிறது என புதிய ஜனநாயக முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளரும் ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவருமான ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.**

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாக இருந்தது. எமது நாட்டின் பொருளாதாரத்தை ரணில் விக்கிரமசிங்கவுக்கே கட்டியெழுப்ப முடியும்.

நாடு வங்குரோத்தடைந்த போது, நாட்டை பொறுப்பேற்க அவர் மாத்திரமே முன்வந்தார். நாங்கள் அனைவரும் தற்போது நிம்மதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்திக்கொடுத்தது ரணில் விக்கிரமசிங்கவாகும்.

என்றாலும் ஜனாதிபதித் தேர்தலில் துரதிஷ்டவசமாக நாட்டு மக்கள் வேறு ஒரு தீர்மானத்தை எடுத்தார்கள். தற்போது மக்கள் நியமித்திருக்கும் ஜனாதிபதியின் காலை வாரிவிட நாங்கள் நினைப்பதில்லை.

இருந்தபோதும் ஜனாதிபதியின் சில தீர்மானங்கள் குறித்து எங்களுக்கு திருப்தியடைய முடியாது. அவருக்கு இருக்கும் அனுபவக் குறைவே இதற்கு காரணமாகும். நாட்டின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்பது என்பது இலகுவான பொறுப்பல்ல-என்றார். (அ)

# பிரதான அரசியல் கட்சிகளுக்கு நாம் சவாலாக மாறியுள்ளோம்!

## ரவி குமுதேஷ் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 30

“பிரதான அரசியல்கட்சிகளுக்கு, ஐக்கிய ஜனநாயகக்குரல் கட்சியானது பெரும் சவாலாக மாறியுள்ளதாக அக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய ஜனநாயக்குரல் கட்சியின் தலைவர் ரஞ்சன் ராமநாயக்க தலைமையில் இன்று இடம்பெற்ற கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரதான அரசியல் கட்சிகளுக்கு நாம் சவாலாக மாறியுள்ளோம் என்ற விடயத்தை நாங்கள் தெரிந்து கொண்டோம். ஐக்கிய ஜனநாயகக்குரல் கட்சியின் மாநாடு அண்மையில் இடம்பெற்ற நிலையில் மாநாடு தொடர்பாக சேறு பூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரபல அரசியல் கட்சிகளை சேர்ந்த இருவரினால் அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதாவது ரஞ்சன் ராமநாயக்க பல்கலைக் கழக மாணவர்களுக்கு பணம் கொடுத்து மாநாட்டுக்கு வரவழைத்திருந்ததாக ஊடகங்களில் தகவல் வெளியானது.

பல்கலைக்கழக மாணவர்களை விலை கொடுத்து வாங்கும் அளவில் மோசமாக செயல்படுபவர்கள் நாம் அல்ல. எனவே இது அரசியல்லாபம் கருதி பிரிதொருதரப்பினரால் திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும்-என்றார். (அ)

# அரசின் மீது அதிருப்தி!

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 30

தற்போதைய அரசாங்கத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டிருப்பதை, காலி எல்பிட்டிய தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டுவதாகவும், இதேநிலை, பாராளுமன்றத் தேர்தலிலும் ஏற்படும் எனவும், மலையக மக்கள் முன்னணி தலைவரும், ஐக்கிய மக்கள் கூட்டணியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் ஜனாதிபதி மற்றும் அவருடைய கட்சி, அடுத்து வருகின்ற அனைத்து தேர்தல்களிலும், பாரியளவில் வெற்றி பெறுவதை, நாம் கடந்த காலங்களில் பார்த்திருக்கின்றோம்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து, ஒரு மாதத்தின் பின்பு இடம்பெற்ற உள்ளுராட்சி மன்ற தேர்தலில், 50 வீதத்திற்கு அதிகமான வாக்குகளை பெறமுடியாமல் இருக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் மூலம், ஜனாதிபதியின் மீதும், அரசாங்கத்தின் மீதும் அதிருப்தி ஏற்பட்டிருப்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

ஜனாதிபதி, எதிர்கட்சியில் இருந்த போது, தான் பதவிக்கு வந்தால், 48 மணித்தியாலயத்தில் பல மாற்றங்களை செய்வதாக கூறினார்.

பல அதிசயங்கள் செய்யக்கூடிய திறமை, தன்னிடமும் தனது குழுவினரிடமும் இருப்பதாக கூறினார்.

ஆனால், இப்பொழுது தான் மந்திரவாதியோ, தந்திரவாதியோ இல்லை என கூறுகினார்.

இது தான் உண்மையான நிலைமை.

பதவிக்கு வருவதற்கு முன்பும், எதிர்கட்சியில் இருந்துக் கொண்டும், எதை வேண்டுமானாலும் பேசலாம்.

ஆனால் நாற்காலியில் அமர்ந்தவுடன், தான் கூறியதை நடைமுறைப்படுத்துவதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றது என்பதை, புரிந்துகொள்ள முடியும்.

எனவே, நிதானமாக சிந்தித்து செய்யக்கூடிய விடயங்களை மாத்திரம், மக்களிடம் கூற வேண்டும்.

இதனடிப்படையில், நாங்கள் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில், பெரும்பான்மை பெற்று, புதிய அரசாங்கத்தை அமைக்க கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# சஜித் வெற்றி பெறுவதை ரணில் விரும்பவில்லை!

## எஸ்.எம்.மரிக்கார் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 30

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடையவில்லை, தோற்கடிக்கப்பட்டோம். சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகுவதை ரணில் விக்கிரமசிங்க விரும்பாததால் திட்டமிட்ட வகையில் நெருக்கடிகளை ஏற்படுத்தினார். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களித்த 20 இலட்சம் ஐக்கிய தேசியக் கட்சியினர் பொதுத் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

தெஹிவளை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலின் போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் ஜனாதிபதி மறந்து விட்டார். ராஜபக்ஷர்கள் உகண்டாவில் மறைத்து வைத்துள்ள நிதியை இலங்கைக்கு கொண்டு வருவதாக குறிப்பிட்டனர். உகண்டா விவகாரம் தேர்தல் மேடை பிரச்சாரம் மாத்திரமே என்று தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை மறுசீரமைப்பதாகவும், உணவு மற்றும் சுகாதார சேவைகளுக்கு விதித்துள்ள வெற் வரியை இரத்து செய்வதாக ஜனாதிபதி அநுரகுமார தேர்தல் பிரசாரத்தின் போது குறிப்பிட்டார். ஆனால் தற்போது சர்வதேச நாணய நிதிய செயல் திட்டத்தை எவ்வித மாற்றமுமில்லாமல் முன்னெடுப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆகவே ஜனாதிபதித் தேர்தலின் போது தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் மறக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் 20 இலட்சம் ஆதரவாளர்கள் வாக்களித்தார்கள். அவர் இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. ஆகவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளிக்க வேண்டும்-என்றார். (அ)

# தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியில் சரிவு!

## சாகர காரியவசம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 30

தேசிய மக்கள் சக்தியினரின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாத காலத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய எல்பிட்டிய தேர்தலில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளமை தென்படுகின்றது.

எது எவ்வாறாக இருப்பினும் பொதுஜன பெரமுவின் வாக்கு வங்கியில் 10 வீதம் அதிகரிப்பு பதிவாகியுள்ளது. அந்த வகையில் எந்த சந்தர்ப்பத்திலும் பொய்யான வாக்குறுதிகளை கண்டு ஏமாறமாட்டோம் என்ற ஆணையை வழங்கியுள்ள எல்பிட்டிய மக்களுக்கு எம்முடைய நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

மொட்டுக் கட்சியினர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மக்கள் மனதில் குரோதத்தை விதைத்தே மக்களின் வாக்குகளை அவர்கள் பெற்றுக்கொண்டனர். அந்த வகையில் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஆட்சிக்கு வந்தமையை தொடர்ந்து மீண்டும் மக்களை ஏமாற்றவேண்டாம்-என்றார். (அ)

# வாக்குறுதிகளை அநுரகுமார நிறைவேற்றியதாக இல்லை!

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, ஒக். 30

பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்ற பெரும்பான்மையை வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொதுத் தேர்தலை இலக்காக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு கொலன்னாவ கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவரான சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று முன்தினம் மாலை கொலன்னாவ பிரதேசத்தில் இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் எஸ்.எம்.மரிக்காரால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நெருக்கடியில் உள்ள மக்களை மீட்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அரசாங்கம் மக்களுக்கு உறுதியளித்தது. அந்த விடயங்களை மேற்கொண்டதாக தெரியவில்லை.

மக்கள் விடுதலை முன்னணியினருக்க நாடாளுமன்றத்தில் பெரும்பன்மையை வழங்காது ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்குமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதுவே நாட்டிற்கு பொருத்தமான தெரிவாக அமையும்

ஆட்சிக்கு வந்தவுடன் நேரடி மற்றும் மறைமுக வரிகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தேர்தல் மேடைகளில் அநுர குமார திஸாநாயக்க கூறினார். ஆனால் அவற்றை அவரால் நிறைவேற்ற முடியாது போயுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து உடன்படிக்கையை மாற்றியமைப்பேன் என்று தெரிவித்தார். என்ற போதிலும், அவரால் இன்று மாற்றியமைக்க முடியவில்லை-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் ஏறாவூரில் மூவர் கைது

ஏறாவூர், ஒக். 30

**மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீரா கேணி பகுதியிலுள்ள வீடொன்றில் போதைப்பொருளுடன் பெண் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

ஏறாவூர் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் ஏறாவூர் பிரதேசத்தைச் சேர்ந்த 24, 33 மற்றும் 36 வயதுடையவர்கள் ஆவர்.

இந்த சந்தேக நபர்களிடமிருந்து 11 கிராம் 230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள், 10, 500 ரூபாய் பணம் மற்றும் போதைப்பொருள் பொதி செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## இலவச சத்திர சிகிச்சை முகாம்

காத்தான்குடி, ஒக். 30

சவூதி அரேபியாவின் நிவாரணம் மற்றும் மனித நேயப் பணிகளுக்கான மன்னர் சல்மான் மையம், அல் பஷர் சர்வதேச அமைப்புடன் இணைந்து நடத்தும் இலவச கண்புரை சத்திர சிகிச்சை முகாம் எதிர்வரும் நவம்பர் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் 16 ஆம் திகதி சனிக்கிழமை வரை மட்டக்களப்பு, காத்தான்குடி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளன.

இந்த சத்திர சிகிச்சைக்கு நோயாளர்களைத் தெரிவு செய்யும் பரிசோதனை முகாம்கள் பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பொல்கஹவெலயில் அமைந்துள்ள கல்யாண மண்டபம், பண்டாவ என்ற இடத்திலும் மாலை 4 மணிக்கு ஒட்டமாவடி தாருஸ்ஸலாம் பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

நாளை 31ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு காத்தான்குடி ஆதார மருத்துவமனையிலும் அன்றைய தினம் மாலை 4 மணிக்கு கல்முனை ஆதார மருத்துவமனையிலும் நடைபெறவுள்ளது.

எனவே, கண்புரை சத்திர சிகிச்சை செய்யவுள்ளவர்கள் தங்களை பரிசோதித்து பதிவு செய்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)



## ஊடக திறனாய்வு போட்டியில் மாணவன் றிமாஸ் 3ஆம் இடம்

கல்முனை, ஒக். 30

மொறட்டுவை பல்கலைக்கழகம் நடத்திய அகில இலங்கை ஊடக திறனாய்வுப் போட்டியில் கல்முனை ஸாஹிரா கல்லூரியின் உயர்தரப் பிரிவு மாணவன் எம். ஆர். எம். றிமாஸ் அறிவிப்பாளர் போட்டியில் பங்கேற்று அகில இலங்கை ரீதியில் 3ஆம் இடத்தை பெற்றுக் கொண்டுள்ளார்.

பாடசாலைக்கும் பிரதேசத்துக்கும் பெருமை தேடித்தந்துள்ள மாணவனை பாராட்டுவதோடு இப்போட்டிக்காக மாணவனை வழிப்படுத்தி - தயார்ப்படுத்திய பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் யூ. எல். எம். ஹிலாலுக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதாக அதிபர் எம். ஐ. ஜாபீர் தெரிவித்தார். (எ)

## தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு திருகோணமலையில் செயலமர்வு

திருகோணமலை, ஒக். 30

நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் தமிழ்பேசும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான செயலமர்வு திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய பூரண ஒத்துழைப்புக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்ட திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர். சசீலன், நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலிலும் தங்களது ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து வாக்களிப்பு நிலையங்களில் சிரேஷ்ட தலைமை தாங்கும்



அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள், கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள், தேர்தல் தொடர்பான சட்டங்கள், தேர்தலுக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள், தேர்தலுக்கு முந்தைய நாள் வாக்குச் சாவடியை அடைந்ததன் பின்னர் செய்ய வேண்டியவை, வாக்களிப்பு நிலைய முகவர்கள், ஒத்திகை நடத்தல், முதலாவது செய்தி அறிவித்தல் வழங்குதல், வாக்கெடுப்பு நிலையத்துக்குள் அல்லது அதனைச் சூழவுள்ள பகுதிகளில் தடை செய்யப்பட்ட நடத்தைகள், வாக்கெடுப்பை முடிவுறுத்தல், வாக்கெடுப்பு முடிவடைந்ததும் வாக்குப் பெட்டியை பொறியிடும் முறை போன்ற பல விடயங்கள் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரால் தெளிவூட்டப்பட்டன.

இதன்போது தமிழ்பேசும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் 135 பேர் கலந்து கொண்டனர். (எ)

# மட்டு. நீதிமன்ற வளாகத்தில் மீண்டும் பலத்த பாதுகாப்பு!

மட்டக்களப்பு, ஒக். 30

மட்டக்களப்பு நீதிமன்ற கட்டட தொகுதியை குண்டு வைத்து தகர்க்கப் போவதாக பொலிஸாருக்கு கடிதம் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டது. இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்று முன்தினம் மீண்டும் விசேட அதிரடிப் படையினர் சோதனை மேற்கொண்ட பின்னர் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்றன.

குறித்த நீதிமன்ற கட்டடத் தொகுதியை 25ஆம் திகதிக்கும் 28 ஆம் திகதிக்கும் உட்பட்ட நாட்களில் வெடிகுண்டு வைத்து தகர்க்கப் போவதாக கடந்த 23 ஆம் திகதி வியாழக்கிழமை பொலிஸாருக்கு கிடைத்த பதிவுத் தபால் கடிதம் ஒன்றை டுத்து பொலிஸார் உடனடியாக நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து கடந்த வியாழக்கிழமை இரவு தொடக்கம் நீதிமன்ற கட்டட தொகுதியை சுற்றி பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்ட நிலையில் வெள்ளிக்கிழமை காலை 5 மணி தொடக்



கம் விசேட அதிரடிப் படையினர் 8 மணி வரை மோப்ப நாய் உதவியுடன் தேடுதல் நடத்திய பின்னர் நீதிமன்றத்துக்குள் செல்வோரை சோதனையின் பின்னர் உள்நுழைய அனுமதித்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமையும் விசேட அதிரடிப் படையினர், மோப்ப நாயின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் நீதிமன்ற உத்தியோகத்தர்களின் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் உள்நுழைய தடை விதித்ததுடன் அனைவரையும் பலத்த சோதனையின் பின்னர் உள்நுழைய அனுமதித்தனர்.

கட்டட தொகுதியை சுற்றி பொலிஸார் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் புலனாய்வுப் பிரிவினரும் அந்தப் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அதேவேளை குண்டு வெடிக்கப் போவதாக வந்த கடிதம் தொடர்பில் பொலிஸார் மற்றும் [illegible] விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## உள்ளூராட்சி மன்ற வருமானத்தை அதிகரிக்க ஆளுநர் நடவடிக்கை



திருகோணமலை, ஒக். 30

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர மற்றும் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம். பி. எஸ். ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல். பி. மதநாயக்க, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம். மணிவண்ணன், திருகோணமலை உதவி உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி மன்றங்களின் வருமானத்தை அதிகரிக்கவும், கழிவுகளை பிரித்து சேகரித்து கழிவுகளை முகாமைத்துவம் செய்யவும், உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் குறித்து அறிக்கை அளிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கினார்.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபையும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் செயலாளர்களுடன் கலந்துரையாடப்பட்டதுடன், எடுக்கப்பட வேண்டிய தீர்வுகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவ முகாமுக்குள் நுழைந்து மர்ம நபர்கள் கொடூரத் தாக்குதல்

**படையினர் 40 பேர் பலியாகினர்!**

டாகர், ஒக். 30

**ஆபிரிக்காவில் இராணுவ முகாமுக்குள் நுழைந்த மர்ம நபர்கள் கொடூரத் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் படையினர் 40 பேர் உயிரிழந்தனர். தாக்குதலில் ஈடுபட்ட நபர்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க அந்த நாட்டின் ஜனாதிபதி இட்ரிக் டெபி உத்தரவிட்டுள்ளார்.**

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சாட்டின் மேற்கு பகுதியில் இராணுவ முகாம் ஒன்றுள்ளது. இதற்குள் நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாத நபர்கள் சிலர் நுழைந்து உறக்கத்தில் இருந்த படையினர்மீது திடீர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக நாற்பது பேர் பலியாகினர்.

பின்னர் தாக்குதலில் ஈடுபட்ட அந்த மர்ம நபர்கள் தப்பியோடினர். இந்தத் தாக்குதல் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதல் சம்பவம் நடந்த முகாமுக்கு நேற்று சென்ற ஜனாதிபதி இட்ரிக் டெபி, தாக்குதலில் ஈடுபட்ட நபர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இதன்படி நாடு முழுவதும் தேடுதல் வேட்டையை இராணுவம் முடுக்கி விட்டுள்ளது. (எ)

# சீனா - இந்தியா ஒப்பந்தத்தால் இருநாட்டு உறவில் முன்னேற்றம்

மொஸ்கோ, ஒக். 30

சீனா - இந்தியா ஒப்பந்தம் இரு நாட்டு உறவில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் அண்மையில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சீன ஜனாதிபதி ஜின்பிங்கை சந்தித்து பேசினார். அப்போது கிழக்கு லடாக்கில் ரோந்து மற்றும் படை விலக்கல் தொடர்பில் முடிவு எட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து லடாக் எல்லையில் இரு நாடுகளும் படைகளை வாபஸ் பெற்று வருகின்றன. இரு நாட்டு தலைவர்களின் இந்த சந்திப்பை ரஷ்யா வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் இந்தியாவுக்கான ரஷ்ய தூதுவர் ரெனிஸ் அலிபோவ் கூறுகையில், "மோடி - ஜின்பிங் சந்திப்பில் நாங்கள் எந்த பங்களிப்பையும் செய்யவில்லை. ஆனால், இது ரஷ்யாவில் நடந்திருப்பதற்கு மகிழ்ச்சியடைகிறோம். இந்தச் சந்திப்பை முழு மனதோடு வரவேற்கிறோம்" என தெரிவித்தார். எல்லை பிரச்னை தொடர்பான சீனா - இந்தியா ஒப்பந்தம் இரு நாட்டு உறவில் ஒரு நேர்மறை முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறினார். (எ)



# பிலிப்பைன்ஸில் நிலச்சரிவு இதுவரை 116 பேர் மரணம்!

மணிலா, ஒக். 30

பிலிப்பைன்ஸில் நிலச்சரிவில் சிக்கி 116 பேர் பலியாகினர். மேலும் 40 பேர் நிலச்சரிவில் சிக்கியுள்ளதாகவும் அவர்களைத் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸை தாக்கிய ட்ராமி புயலால் கடந்த வாரம் அங்கு கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால் அங்குள்ள பல மாகாணங்கள் வெள்ளக் காடாக மாறின. இந்த வெள்ளப் பெருக்கில் பலர் அடித்துச் செல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து அங்கு பயங்கர நிலச்சரிவும் ஏற்பட்டது. இதனால் பல வீடுகள் மண்ணில் புதையுண்டன.

நிலச்சரிவில் சிக்கி 30இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். தொடர்ந்து நடைபெற்ற மீட்புப் பணியில் பலர் சடலமாக மீட்கப்பட்டதால் பலி எண்ணிக்கை 116 ஆக உயர்ந்தது. மேலும் 40 பேர் நிலச்சரிவில் சிக்கியிருப்பதாக கூறப்படுகிறது. எனவே, அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (எ)

# ரஷ்யா - உக்ரைன் இடையே போரை நிறுத்த முடியும்!

**மோடிமீது ஜெலென்ஸ்கி நம்பிக்கை**

கீவ், ஒக். 30

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் ரஷ்யா - உக்ரைன் இடையே நீடித்து வரும் போரை நிறுத்த உதவ முடியும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் ரஷ்யா, உக்ரைன் இடையே போர் நடைபெற்று வருகிறது.

இது தொடர்பில் உக்ரைன் ஜனாதிபதி கூறுகையில், "உலகின் மிகப்பெரிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். அந்த நாட்டின் பிரதமர் மோடி உலகின் செல்வாக்குமிக்க தலைவராக விளங்குகிறார். எனவே, ரஷ்யா - உக்ரைன் போரை நிறுத்த அவரால் உதவ முடியும். இந்தியாவில் அமைதி பேச்சுகள் நடைபெற வாய்ப்புகள் உள்ளன.

ரஷ்யா அத்துமீறி செயல்பட்டு வருகிறது. ரஷ்யாவின் அத்துமீறல்களால் உக்ரைன் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ரஷ்யாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஏற்கனவே அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்து இருந்தாலும் மிகப்பெரிய அளவில் பாதிப்பு இல்லை. இந்தியா, சீனா, துருக்கி உள்ளிட்ட நாடுகளும் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்தால் அந்த நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும். வேறு வழியின்றி ரஷ்ய ஜனாதிபதி புடின் போரை நிறுத்தும் நிலைக்குத் தள்ளப்படுவார்"- என்றார். (எ)

# இஸ்ரேல் அதிரடி தாக்குதல் லெபனானில் 19 பேர் பலி!

கெய்ரோ, ஒக். 30

லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய அதிரடித் தாக்குதலில் 19 பேர் பலியாகினர்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நீடித்துவரும் போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா போராளிகளும் ஆதரவு வழங்கி வருகின்றனர். இந்த அமைப்புகள் இஸ்ரேல்மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தத் தாக்குதல்களுக்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது. குறிப்பாக, லெபனானுக்குள் நுழைந்து இஸ்ரேல் இராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில், லெபனான் மீது இஸ்ரேல் நேற்று மீண்டும் தாக்குதல் நடத்தியது. இதில் 19 பேர் உயிரிழந்தனர். லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் ஹிஸ்புல்லா போராளிகள் உட்பட இதுவரை மொத்தம் 2 ஆயிரத்து 672 பேர் உயிரிழந்தனர். மேலும், சுமார் 12 ஆயிரத்து 500 பேர் படுகாயமடைந்தனர். (எ)

# கோவில் திருவிழாவில் பயங்கர வெடி விபத்து

**150 பேர் படுகாயம்**

கேரளா, ஒக். 30

இந்தியாவின் கேரள மாநிலம் காசர்கோடு அருகே கோவில் திருவிழாவில் செவ்வாய்க்கிழமை அதிகாலை ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 150இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இதில், சிலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

கேரள மாநிலம் காசர்கோடு அருகே அஞ்சூத்தம்பலம் வீரர்காவு கோவில் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் இக்கோவில் திருவிழா வெகு விமர்சையாக நடைபெறும். இதன்படி, இந்த ஆண்டுகான திருவிழா அங்கு தொடங்கி நடைபெற்று வருகிறது. திருவிழாவை முன்னிட்டு பட்டாசுகள் கோவில் அருகே உள்ள குடோனில் வைக்கப்பட்டிருந்தன. கோவில் திருவிழாவை காண பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்தனர்.

இந்த நிலையில், குடோனில் வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் தீப்பற்றி வெடித்து சிதறின. வாணவேடிக்கையின் போது பட்டாசுகளில் இருந்து வெளியான தீப்பொறி குடோனில் இருந்த பட்டாசுகள் மீது விழுந்த காரணத்தால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இதனால் திருவிழாவை காண வந்திருந்த மக்களில் 150இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். (எ)

# "சினிமா வசனம் போன்று விஜயின் உரை இருந்தது"

சென்னை, ஒக். 30

பாசிசம், பாயாசம் என்று விஜய் உரையாற்றியது சினிமா வசனம் போன்று தான் இருந்தது என முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

சென்னை தியாகராய நகரில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"நடிகர் விஜய் நடத்திய மாநாட்டில் அவர் பேசியதில் சில மகிழ்ச்சி தருகிறது. சில வாசகங்கள் மகிழ்ச்சி தரவில்லை. எதுவாக இருந்தாலும் அவர் கட்சி தொடங்கியுள்ளார். அவருக்கு எனது வாழ்த்துகள். தமிழக அரசியலில் ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்பதை தேர்தல் தான் முடிவு செய்யும். ஆட்சியிலும், அதிகாரத்திலும் பங்கு என்பதை இப்போது எப்படி சொல்ல முடியும்?

ஒரு காலத்தில் மத்தியில் தனிக்கட்சி தான் ஆட்சி செய்ய வேண்டும் என்றுதான் இருந்தது. 1996இற்கு பிறகு பல கட்சிகள் ஆட்சி செய்கிறது. சாத்தியமில்லாதது எல்லாம் ஒரு காலத்தில் சாத்தியம் ஆகலாம். எனவே, இதுகுறித்து போகப்போகத் தான் சொல்ல முடியும். பாசிசம், பாயாசம் என்று விஜய் பேசியது சினிமா வசனம் போல் தான் தெரிகிறது. சினிமா வசனத்தை எல்லாம் கொள்கையாக எடுத்துக்கொள்ள வேண்டாம்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலோன் டி'ஆர் விருதை வென்றார் மிட் பீல்டர்

பாரிஸ், ஒக். 30

மான்செஸ்டர் சிற்றி அணியில் விளையாடும் மிட் பீல்டர் ரோட்ரி பலோன் டி"ஆர் விருதை வென்றுள்ளார்.


உதைபந்தாட்ட விளையாட்டில் வழங்கப்படும் மிகப் பெரிய விருதுகளில் ஒன்று பலோன் டி"ஆர் விருது. மெஸ்சி பார்சிலோனாவுக்கும், கிறிஸ்டியானோ ரொனால்டோ மான்செஸ்டர் யுனைடெட் மற்றும் ரியல் மட்ரிட் அணிக்காகவும் விளையாடிய காலத்தில் இருவரும் தான் இந்த விருதை மாறிமாறி வென்றனர். அவர்கள் இருவருக்கிடையே கடும் போட்டி நிலவும். தற்போது மெஸ்சி அமெரிக்கா லீக்கில் விளையாடுகிறார். ரொனால்டோ சவுதி லீக்கில் விளையாடுகிறார்.

இந்த வருட விருதுக்காக பரிந்துரை செய்யப்பட்ட பெயர்களில் இருவருடைய பெயரும் இடம்பெறவில்லை. இந்த நிலையில் இங்கிலீஷ் பிரீமியர் லீக் அணியான மான்செஸ்டர் சிற்றி அணியில் விளையாடும் மிட் பீல்டர் ரோட்ரி பலோன் டி"ஆர் விருதை வென்றுள்ளார். 2023 - 24 சீசனில் சிறப்பாக விளையாடியதன் காரணமாக பலோன் டி"ஆர் விருதை வென்றுள்ளார். தொடர்ந்து நான்காவது முறையாக மான்செஸ்டர் சிற்றி இங்கிலீஷ் பிரீமியர் லீக்கை வெல்ல முக்கிய காரணமாக இருந்தார்.

இந்த ஆண்டில் ஸ்பெயின் அணி யூரோ கிண்ணத்தை வெல்ல மிட் பீல்டர் ரோட்ரி முக்கிய காரணமாக இருந்தார். கிறிஸ்டியானோ ரொனால்டோ 2008இல் மான்செஸ்ட் யுனைடெட் அணிக்காக பலோன் டி'ஆர் விருதை வென்ற பிறகு இங்கிலீஷ் பிரீமியரில் விளையாடும் ஒரு வீரர் பலோன் டி'ஆர் விருதை வெல்வது இதுவே முதல் முறையாகும். (எ)



# பாரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் 2ஆவது சுற்றில் சிட்சிபாஸ்



பாரிஸ், ஒக். 30

பாரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் சிட்சிபாஸ் 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

உலகின் பல முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ள பாரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் கிரீஸ் நாட்டைச் சேர்ந்த முன்னணி வீரரான சிட்சிபாஸ் ஸ்பெயினின் ரொபேர்டோ கார்பலேஸூடன் மோதினார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 4 - 6 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த சிட்சிபாஸ், ஆட்டத்தின் அடுத்த இரு செட்களை 6 - 3, 6 - 3 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். இதன் மூலம் சிட்சிபாஸ் 4 - 6, 6 - 3, 6 - 3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# ஆஸி. அதிரடி வீரர் மத்தியூ வேட் ஓய்வு


மெல்பேர்ன், ஒக்.30

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து அவுஸ்திரேலிய அணியின் வீரர் மத்தியூ வேட் ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் அவுஸ்திரேலிய அணிக்காக 36 டெஸ்ட், 97 ஒருநாள் மற்றும் 92 ரி - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். மேலும், 15 ஐ. பி. எல். போட்டிகளிலும் விளையாடியுள்ளார். டெஸ்டில் 1613 ஓட்டங்களும், ஒருநாள் போட்டிகளில் 1867 ஓட்டங்களும், ரி - 20 போட்டிகளில் 1202 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

இவர் கடந்த 2011ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய அணிக்காக சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அறிமுகமானார். 2021ஆம் ஆண்டு ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்ற அவுஸ்திரேலிய அணியிலும் இடம்பெற்றிருந்தார். அத்தோடு, அவுஸ்திரேலிய அணி உலகக் கிண்ணத்தை வெல்வதற்கும் இவர் மிக முக்கிய பங்காற்றினார்.

இந்த நிலையில், மத்தியூ வேட் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்துள்ளார். இவரது முடிவை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை உறுதி செய்துள்ளது. (எ)



# பும்ராவை எதிர்கொள்ளவே நான் மிகவும் சிரமப்பட்டேன்

## மக்ஸ்வெல் வெளிப்படுத்தல்



சிட்னி, ஒக். 30

ஜஸ்பிரித் பும்ராவே தான் எதிர்கொண்டதிலேயே சிறந்த சவாலை கொடுத்த பந்து வீச்சாளர் என்று அவுஸ்திரேலிய நட்சத்திர வீரர் மக்ஸ்வெல் பாராட்டியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் ஜஸ்பிரித் பும்ரா தான் உலகின் முதன் நிலை பந்து வீச்சாளராக திகழ்கிறார் என்று பல முன்னாள் ஜாம்பவான் வீரர்கள் பாராட்டி வருகின்றனர்.

குறிப்பாக அழுத்தமான சூழ்நிலையில் துல்லியமாக பந்தை வீசும் அவர் தேவைப்படும் நேரத்தில் விக்கெட் வீழ்த்தி கொடுத்து இந்தியாவை வெற்றி பெற வைத்து வருகிறார்.

ரி - 20 உலகக் கிண்ண தொடரில் மொத்தமாக 15 விக்கெட்களை வீழ்த்தி, இந்தியா 17 வருடங்களின் பின்னர் உலகக் கிண்ணத்தை வெல்ல முக்கிய பங்காற்றி தொடர்நாயகன் விருது வென்றார். அதனால் அவர் உலகின் சிறந்த பந்துவீச்சாளராக செயல்படுவதாக பலரும் பாராட்டி வருகிறார்கள்.

இந்த நிலையில் ஜஸ்பிரித் பும்ராவே தான் எதிர்கொண்டதிலேயே சிறந்த சவாலை கொடுத்த பந்து வீச்சாளர் என்று அவுஸ்திரேலிய நட்சத்திர வீரர் மக்ஸ்வெல் பாராட்டியுள்ளார்.

"நான் எதிர்கொண்டதிலேயே மிகவும் சிறந்த பந்து வீச்சாளர் பும்ராவாக இருப்பார். அவர் இந்த உலகிலேயே எல்லா காலத்திலும் சிறந்த பந்து வீச்சாளராக திகழ்வார் என்று நான் நினைக்கிறேன். அவர் கையிலிருந்து பந்தை வெளியிடும் இடம் மிகவும் வித்தியாசமானது. ஏனெனில் அவர் பந்தை தம்முடைய உடலுக்கு முன்பாக வெளியிடுகிறார். அதனால் அவர் தாம் விரும்பும் விடயத்தை கடைசி நொடியில் மாற்றும் திறமை கொண்டதாக கருதுகிறேன்.

அவரிடம் பந்தை மெதுவாகவும், அற்புதமான ஜோர்க்கர் பந்துகளையும், பந்தை இருபக்கமும் திரும்பச் செய்யும் நம்ப முடியாத திறமை இருக்கிறது. அந்த வகையில் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக இருப்பதற்குத் தேவையான அனைத்து தந்திரங்களையும் ஜஸ்பிரித் பும்ரா கொண்டுள்ளார் என்று நினைக்கிறேன்"என கூறினார். (எ)

# கேன் வில்லியம்சன் விளையாடமாட்டார்


மும்பை, ஒக். 30

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டியிலும் கேன் வில்லியம்சன் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு வந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட், தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெங்களூரு மற்றும் புனேவில் நடைபெற்ற முதல் இரு போட்டிகளில் நியூசிலாந்து வெற்றி பெற்று தொடரை கைப்பற்றி விட்டது. இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது போட்டி நவம்பர் முதலாம் திகதி மும்பையில் தொடங்குகிறது.

முன்னதாக முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் நியூசிலாந்து அணியின் முன்னணி வீரர் கேன் வில்லியம்சன் காயம் காரணமாக விளையாடவில்லை. அவர் 3ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவார் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், காயம் முழுமையாக குணமடையாததால் வில்லியம்சன் இந்தியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடமாட்டார் என நியூசிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (எ)



# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்; இந்திய அணிக்கு சிக்கல்

சென்னை, ஒக். 30

ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, நியூசிலாந்துக்கு எதிராக அடுத்தடுத்து இரு டெஸ்ட் போட்டிகளில் தோல்வியடைந்ததன் மூலம் ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பில் சிக்கலை எதிர்கொண்டுள்ளது. அதேவேளையில் இந்திய அணியின் இந்த திடீர் சரிவு மற்ற அணிகளுக்கான வாய்ப்பின் கதவுகளை திறந்துள்ளது.

தற்போதைய நிலையில் ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் இந்தியா 62. 82 வெற்றி சராசரியுடன் முதலிடத்தில் உள்ளது. அவுஸ்திரேலிய அணி 62. 50 வெற்றி சராசரியுடன் 2ஆவது இடத்தில் உள்ளது. இந்த இரு அணிகளே மீண்டும் ஒரு முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனினும் நியூசிலாந்துக்கு எதிரான இரு தோல்விகளால் இந்திய அணியின் வாய்ப்பு கடினமாக மாறியுள்ளது.

இந்தியா, அவுஸ்திரேலியாவை தவிர்த்து இலங்கை, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய அணிகளும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டிஜிற்றல் திரை மூலம் செய்யும் தேர்தல் பிரசாரம் சட்டவிரோதம்

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு



கொழும்பு, ஒக். 30

எந்த ஒரு மாவட்டத் திலோ அல்லது நகரத் திலோ டிஜிற்றல் திரையைப் பயன்படுத்தி தேர்தல் பிரசாரம் செய்வது சட்ட விரோதமானது என தேர்தல் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறான பிரசார நடவடிக்கைகள் இடம்பெறுமாயின் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், எந்தவொரு வேட்பாளரும் தேவையற்ற செல்வாக்கின் ஊடாக வாக் குகளைப் பெற முயற்சித்தால் அது தொடர்பில் சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கோ அல்லது பொலிஸ் நிலையத்திற்கோ அறிவிக்கு மாறும் அவர் குறிப்பிட்டார். (அ)

# எரிவாயு தட்டுப்பாடு 2 நாட்களில் நீங்கும்!

கொழும்பு, ஒக். 30

சந்தையில் லாப்ஸ் எரிவாயு தட்டுப் பாடு இன்னும் இரண்டு நாட்களில் நீங்கும் என லாப்ஸ் நிறுவனம் தெரிவித் துள்ளது.

விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்னை காரணமாக லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் பல பகுதிகளிலும் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் டபிள்யூ. கே. எச். வேகபிட்டிய தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட் டுள்ள போர் நிலைமை காரணமாக லாப்ஸ் நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயு கையிருப்பு நாட்டுக்கு வருவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் லாப்ஸ் நிறுவனத்தின் பிரதான முனையம் வெள்ளத்தில் மூழ்கியமை இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், லாப்ஸ் நிறுவனத் தினால் இறக்குமதி செய்யப்பட்ட எரி வாயு கையிருப்புடன் வந்த சரக்குக் கப்பல் நேற்று முன்தினம் அம்பாந் தோட்டை துறைமுகத்தை அடைந் துள்ளது.

இதன்படி, எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் நாடளா விய ரீதியில் எரிவாயு கையிருப்பு விநி யோகிக்கப்படும் என லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

# 570 ரயில் தடம்புரள்வு சம்பவங்கள் பதிவு

கொழும்பு, ஒக். 30

2020 ஆம் ஆண்டு முதல் இதுவரை ரயில் மார்க்கத்தில் மற்றும் ரயில் பழுது பார்க்கும் இடம் ஆகியவற்றில் மொத்தம் 570 ரயில் தடம்புரள்வு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று ரயில் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, 2020ஆம் ஆண்டு 98, 2021ஆம் ஆண்டு 115, 2022 ஆம் ஆண்டு 132, 2023 ஆம் ஆண்டு 139, 2024ஆம் ஆண்டு இதுவரை 86 ரயில் தடம்புரள்வு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.(எ)

## திருட பழகிய...

என்றும் அநுர கூறினார்.

களுத்துறையில் நடைபெற்ற கூட்டத் தில் கலந்துகொண்டு உரையாற்றுகையி லேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலில் எமக்கு எதி ராக முன்வைத்த பொய்க் குற்றச்சாட்டு கள் காரணமாக மக்கள் குழப்பமடைந் திருந்தார்கள். திசைகாட்டி வெற்றி பெற்று தற்போது ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. எமக்கு எதிரான விமர் சனங்கள் எல்லாமே பொய் என்பது உறுதியாகிவிட்டது.

பாராளுமன்றத்துக்கு அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பிவைக்குமாறு எதிர்த்தரப்பினர் மேடைகளில் கூறுகி றார்கள். திருடப் பழகிய, சட்டவிரோத செயல்களைப் புரிகின்ற, பாராளுமன் றத்திற்கு மிளகாய்த்தூள் கொண்டுவந்த, கத்தியை எடுத்து வந்த, ஆபாச வார்த்தை களைக் கூறிய, தவறான தீர்மானங்களுக்கு கையை உயர்த்துகின்ற நற்பழக்கம் கொண்ட, கார் பெர்மிற், பார் பெர்மிற் வாங்கிப் பழகியவர்கள்தான் மீண்டும் வரவேண்டுமெனக் கூறுகிறார்கள். ஆனால், நாம் இந்தத்தடவை பாரா ளுமன்றத்தை புதியவர்களால் நிரப்புங் கள் என்றே கூறுகிறோம்.

இந்த நாட்டின் அரசியலை சாதகமான ஓர் அரசியலாக மாற்றியமைத்திட வேண்டும். எமது நாட்டில் அரசியல் என்பது ஒரு வியாபாரமாகும். மக்களின் வாக்குகளால் பாராளுமன்றத்துக்கு வந்து அந்த உறுப்பினர் பலத்தைப் பாவித்து சொத்து சேர்க்கின்றனர். கொழும்பில் வீடுகளையும் காணிகளையும் கொள்வ னவு செய்கிறார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் அரசியல் பணத்தை ஈட்டுகின்ற ஒரு வழிவகையாகும் - என்றும் அவர் கூறினார். (எ)

## அறுகம்குடா...

இதேவேளை, அறுகம் குடா சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்பான இரகசிய அறிக்கை குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பயங்கர வாத விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் மேலதிக நீதிவான் பசன் அமரசேகரவி டம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதில், பயங்கரவாத தடை சட்டத் தின் விதிகளின் கீழ் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசார ணைகளை தொடர்வதற்கு நீதிவானின் அனுமதியை புலனாய்வுப் பிரிவினர் கோரியுள்ளனர்.

இதேவேளை, அறுகம் குடா சம்பவம் தொடர்பில் இதுவரை ஆறு சந்தேக நபர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ஐ)

## புதிதாக...

புதிதாக பணம் அச்சிடுப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அதில் எந்தவித உண்மையும் கிடையாது. மத்திய வங்கி சட்டத்தின் பிரகாரம் நாட்டில் பணம் அச்சிட முடியாது.

உண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கையொப்பத்துட னான நாணயத்தாள்களை காண்பதற்கு நாமும் ஆர்வமாக இருக்கிறோம். எனினும் அது சாத்தியப்படாது.

இலங்கை மத்திய வங்கியால் பணம் அச்சிடப்பட்டிருந்தால் அவ்வாறான நாணயத்தாள்கள் சந்தையில் புழக்கத்தில் இருந்திருக்கும். ஆதலால், அவ்வாறு வெளியாகும் செய்திகளில் எந்தவித உண்மையும் கிடையாது -என்றார். (அ)

# "இலங்கை வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லை"

கொழும்பு, ஒக். 30

அமெரிக்கா மற்றும் பிரித்தானியா உள்ளிட்ட சில நாடுகள் இலங்கைக்கான தங்களது பயண ஆலோசனைகளை புதுப்பித்திருந்த போதிலும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட் டுள்ளது.

உள்வரும் மற்றும் வெளிச் செல்வதற் கான பயண முகவர் சங்கத்தின் தலைவர் நளின் ஜயசுந்தர இதனைக் குறிப்பிட் டார்.

எவ்வாறாயினும் எதிர்காலத்தில் முன்பதிவுகள் இரத்து செய்யப்படு வதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் அவர் கவலை வெளியிட்டார்.

இந்த நிலையில் நாடு மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தூதரகங்க ளுக்கு தெளிவுபடுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நளின் ஜயசுந்தர தெரிவித்தார். (அ)

# திருமலையில் உலக போலியோ தினம்



திருகோணமலை, ஒக். 30

உலக போலியோ ஒழிப்பு தினம் திருகோணமலை பரி ஜோசப் கல்லூ ரியில் நடைபெற்றது.

24 -10- 2017இல் இலங்கையிலிருந்து போலியோ முற்றிலுமாக இல்லாதொ ழிக்கப்பட்டது. இதனை நினைவுகூறும் வகையில், ஒரு விழிப்புணர்வு செயல மர்வு, திருகோணமலை றோட்டரி கழகம் சார்பில் திருகோணமலை பரி ஜோசப் கல்லூரியில் நடைபெற்றது.

இதன்போது, திருகோணமலை றோட்டரி கழகத்தின் முன்னாள் பொதுசன தொடர்பாளர் மருத்துவர் ஈ. ஜீ. ஞானகுணாளன், "இலங்கையிலி ருந்து போலியோ முற்றிலுமாக இல்லாதொழிக்கப்பட்டது" சம்பந் தமான விவரங்களை எடுத்துக்கூறி, உலகத்திலேயே போலியோவை இல்லா தொழிப்பதற்கு சர்வதேச றோட்டரி கழகம் 550 மில்லியன் டொலர் நிதி சேகரித்து வழங்கிய விவரங்களையும் எடுத்துக் கூறினார்.

இதேவேளை, இந்த வருடம் இதுவரை உலகில் 54 போலியோ நோயாளிகள் மட்டுமே (பாகிஸ்தான்-32, ஆப்கானிஸ் தான்-22) இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் இலங்கையிலிருந்து மலேரியா நோய் இல்லாதொழிக்கப் பட்டதையும் ஞாபகப்படுத்தி அவ்வாறு டெங்கு நோயையையும் ஒழிப்பதற்கு மாணவ சமுதாயம் முன்வர வேண்டு மென்றும் அவர் கேட்டுக் கொண்டார். (எ)

## பயங்கரவாத...

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பில் தற்போது எந்த கலந்துரையாடலும் இடம்பெறவில்லை எனவும், அது தொடர்ந்தும் இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய அமைச்சர், பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களை முன்வைத்து அதற்கு பாராளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்குவதன் மூலம் மாத்திரமே மாற்றங்களைச் செய்ய முடியும் என்று அவர் கூறினார்.

எவ்வாறெனினும், பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற கருத்து நீண்டகாலமாகவே நிலவி வருகிறது.

புதிய பாராளுமன்ற அமர்வு ஆரம்பமானதும் அரசாங்கம் இதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அரச ஊழியர்...

கொடுப்பனவு எதிர்வரும் ஜனவரி மாதம் வழங்கப்படும் எனவும் சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய சம்பள உயர்வுகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க அமைச்சரவையில் முன்மொழிவு ஒன்றை சமர்ப்பித்து அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான பிரேர ணையை நிறைவேற்றியுள்ளார்.

அரச ஊழியர்களை ஒருபோதும் ஏமாற்ற மாட்டோம் என அவர் இதன் போது குறிப்பிட்டார். (அ)

## இமாம் அறிக்கை...

இமாம் குழு தகவல் அறிந்து கொள்வ தற்காகவே அந்தக் குழு நியமிக்கப்பட் டது. அது உத்தியோகபூர்வ விசாரணை குழுவும் இல்லை. அவ்வாறு இருக்கை யில் அந்தக் குழுவின் அறிக்கையையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

உதய கம்மன்பிலவின் தனிப்பட்ட தேவைகளுக்காக எங்களின் வேலைத் திட்டங்களையும் விசாரணைகளையும் மாற்றிக்கொள்ளமாட்டோம். முறை யான விசாரணைகளை முன்னெடுப் போம்-என்றார். (அ)

## தபால் மூல...

நிலையங்களில் இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை தமது வாக்குகளை செலுத்த முடியும். இதேபோன்று, நவம்பர் 01 மற்றும் 04ஆம் திகதிகளிலும் தபால் மூல வாக்காளர்கள் வாக்களிக்க முடியும்.

இந்த மூன்று நாட்களிலும் வாக்களிக்க முடியாதவர்கள் எதிர்வரும் நவம்பர் 07, 08ஆம் திகதிகளில் மாவட்ட செயலகங் களிலும் தேர்தல் பணிமனைகளிலும் தமது வாக்கை செலுத்த முடியும்.

இந்த முறை பாராளுமன்றத் தேர்த லில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 7 இலட்சத்து 38 ஆயிரத்து 50 பேர் தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## வாகன இறக்கு...

ஒரு குறிப்பிட்ட முறைப்படி வாகன இறக்குமதி செயல்முறையை அனுமதிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதற்கு மத்திய வங்கியும் இணக்கம் தெரிவித்துள்ளது.

எனவே, எதிர்காலத்தில் அதற்கான முறையான நடைமுறையை தயாரித்து, பொது மக்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வழக்கு விசாரணையில் பிரதிவாதியாக ரணில்!

கொழும்பு, ஒக். 30

பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதிவாதியாக பெயரிடுவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது.

குறித்த நியமனத்தை சவாலுக்கு உட்படுத்தி இளம் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று உயர் நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்து, இந்த மனுவில் பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பெயரிட அனுமதி கோரினார்.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதியை பிரதிவாதியாக குறிப்பிட அனுமதித்த மூவரடங்கிய நீதிபதிகள் அமர்வு, மனுவை எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்டது. (அ)

## இஸ்ரேலியர்கள் குறித்து பொலிஸார் விசாரணை

கொழும்பு, ஒக். 30

அறுகம்குடா பகுதியில் உள்ள இஸ்ரேலியர்கள் உள்ளிட்ட சுற்றுலா பயணிகள் சுற்றுலா வீஸாவில் இருக்கும் போது வியாபாரம் அல்லது மதம் சார்பான நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடுகின்றார்களா என்பதை கண்டறிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் இதனைக் கூறினார்.

சுற்றுலா வீஸாவில் சுற்றுலாப் பயணிகள் வியாபாரம், மதம் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கடந்த காலங்களில் இருந்து செய்திகள் வந்துள்ளன.

தற்போதைய நிலவரப்படி, அறுகம்குடா பகுதியில் உள்ள அனைத்து சுற்றுலா பயணிகளும், குறிப்பாக இஸ்ரேலியர்கள், சுற்றுலா வீஸாவில் உள்ளனர்.

விடுமுறையில் சுற்றுலா பயணிகள் ஏதேனும் வியாபாரம், மதம் அல்லது வேறு சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால், அது குறித்து முறைப்பாடு அளிக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் இதன்போது கூறினார். (அ)

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து; புதிதாக விசாரணைகள் நடக்கும்!

கொழும்பு, ஒக். 30

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் புதிதாக விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் இயற்கைக்கு பாரிய ஆபத்து ஏற்பட்டது. மீனவர்கள் பாதிப்படைந்தனர். மேலும் அந்த விடயத்தில் நிதி மோசடி இடம்பெற்றதாகவும் குற்றச்சாட்டுகள் உள்ளன.

இது தொடர்பில் புதிதாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும். எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து தொடர்பில் இதுவரை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசேட பாராளுமன்றக் குழுவும் உருவாக்கப்பட்டது அதில் நானும் அங்கத்துவம் வகித்தேன்.

இந்த விசாரணைகளை அடிப்படையாகக் கொண்டு எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் ஏற்பட்ட இழப்பு தொடர்பில் புதிதாக விசாரணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளோம்-என்றார். (அ)

### பதவி உயர்வு, சம்பள அதிகரிப்பு இல்லையேல்

## ரயில் நிலைய அதிகாரிகள் சங்கம் பணிப் பகிஷ்கரிப்புக்குத் திட்டம்!

கொழும்பு, ஒக். 30

**ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகளை இணைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பதவி உயர்வு பிரச்னைக்கு தீர்வு வழங்கிய பின்னர் ரயில் நடத்துநர்களின் பதவி உயர் மற்றும் சம்பள அதிகரிப்புக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கத் தவறினால் பணிப் பகிஷ்கரிப்புக்கு செல்வோம் என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.**

ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகளின் சங்கத்தின் பதவி உயர்வு மற்றும் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காண அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளபோதும் அரசாங்கம் அதனை மேற்கொள்ளாது ரயில் நடத்துநர்களின் பதவி உயர்வு மற்றும் சம்பளத் திட்டத்தை தயாரித்துள்ளது.

என்றாலும் நடத்துநர்களின் சங்கத்தின் எதிர்ப்பு காரணமாக நிலையப் பொறுப்பதிகாரிகளின் பதவி உயர்வு மற்றும் சம்பள அதிகரிப்பு நடைமுறை இடம்பெறாமல் இருந்து வருகிறது. இது தொடர்பாக பல சுற்று பேச்சுக்கள் இடம்பெற்றபோதும் தீர்வு கிடைக்கவில்லை. தமது பிரச்னைக்கு உடனடியாக தீர்வு வழங்காவிட்டால் உடனடியாக பணி பகிஷ்கரிப்பு போராட்டத்துக்குச் செல்ல தீர்மானித்திருக்கிறோம் என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

(அ)

## சவூதி அரேபிய நிறுவனத்துக்கு எரிவாயு விநியோக ஒப்பந்தம்!

கொழும்பு, ஒக். 30

சவூதி அரேபிய நிறுவனம் ஒன்றுக்கு அடுத்த வருடத்திற்கான எரிவாயு விநியோக ஒப்பந்தத்தை லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத், லிட்ரோ காஸ் லங்கா லிமிடெட் நிறுவனத்திற்கு திரவப் பெற்றோலிய வாயு விநியோகம் செய்வதற்கு ஒற்றை நிலை, இரட்டைக் கவர் முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. 2025ஆம் ஆண்டு சர்வதேச போட்டி ஏல முறையைப் பின்பற்றுகிறது.

அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் நிலையியற் கொள்முதல் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் குறித்த நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்கான எரிவாயு விநியோகத்திற்கான ஏலத்தை சமர்ப்பித்த சிங்கப்பூர் நிறுவனமான சியாம் காஸ் டிரேடிங் நிறுவனத்தின் ஏலம் தொழில்நுட்ப மதிப்பீட்டில் நிராகரிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## நாட்டின் ஏற்றுமதி செயல்திறன் வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 30

கடந்த செப்ரெம்பர் மாதத்தில் இலங்கையின் ஏற்றுமதி செயற்பாடுகள் 937.95 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளன.

இலங்கை சுங்கம் விடுத்துள்ள தற்காலிக தரவுகளுக்கு அமைய 2023 செப்ரெம்பருடன் ஒப்பிடுகையில் கடந்த மாதம் ஏற்றுமதி வருவாய் 3.49 வீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

தேயிலை, இறப்பர் உள்ளிட்டவை சார்ந்த உற்பத்திகள், மின்சார மற்றும் இலத்திரனியல் உற்பத்திகள் மற்றும் கடல் உணவு என்பவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியே இதற்குப் பிரதான காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாராளுமன்ற தேர்தல் குறித்து இதுவரை 939 முறைப்பாடுகள்

கொழும்பு, ஒக். 30

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில், கடந்த செப்ரெம்பர் 26ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரை, 939 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக, தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில், தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 273 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 635 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 10 முறைப்பாடுகளும், ஏனைய விடயங்கள் தொடர்பில் 21 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

## ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி!

கொழும்பு, ஒக். 30

நேற்று முன் தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி சற்று வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.
இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 289 ரூபாய் 8 சதம், விற்பனை பெறுமதி 298 ரூபாய் 16 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ஸ் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 373 ரூபாய் 66 சதம் விற்பனை பெறுமதி 388 ரூபாய் 25 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 311 ரூபாய் 20 சதம், விற்பனை பெறுமதி 324 ரூபாய் 9 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 331 ரூபாய் 53 சதம், விற்பனை பெறுமதி 347 ரூபாய் 51 சதம்.

கனடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 206 ரூபா 77 சதம். விற்பனை பெறுமதி 216 ரூபாய் 2 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 188 ரூபாய் 31 சதம், விற்பனை பெறுமதி 198 ரூபாய் 8 சதம் ஆகும். (அ)

## தேவைப்படுவோரே கடவுச்சீட்டை பெறவேண்டும்

### அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, ஒக். 30

அத்தியாவசிய தேவைகளுக்காகக் கடவுச்சீட்டு தேவைப்படுகின்றவர்கள் மாத்திரம் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்ளப் பிரவேசிக்குமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் வைத்து இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது கடவுச்சீட்டுகளை அச்சிடுவதற்கான கடவுச் சீட்டு வெற்றுப் புத்தகங்களின் கிடைப்பனவு மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் இது அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது.

இது கட்டம் கட்டமாகவே இலங்கைக்குக் கிடைக்கிறது. இதனால் கடவுச்சீட்டுகளை வழங்குவதில் சிக்கல் உள்ளது. எனவே அத்தியாவசியமான தேவை உடையவர்கள் மாத்திரம் கடவுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளப் பிரவேசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மாறாக அனைவரும் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காகப் பிரவேசித்து, நிலவுகின்ற நெரிசலில் அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டாம்.-என்றார்.

அதேவேளை, புதிதாக விநியோகிக்கப்படுகின்ற கடவுச் சீட்டுகளில் மொழி முன்னுரிமை மாற்றப்பட்டு சிங்கள மொழி இரண்டாவதாகவும், தமிழ் மொழி மூன்றாவதாகவும் அச்சிடப்பட்டுள்ளமை போன்ற விடயங்கள் குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதில் வழங்கிய அமைச்சர் விஜித ஹேரத், குறித்த கடவுச் சீட்டுகளை புதிய அரசாங்கம் வடிவமைக்கவில்லை என்றும், கடந்த அரசாங்கத்தால் வடிவமைக்கப்பட்ட இந்த கடவுச்சீட்டுகளை மாற்றியமைக்கவில்லை என்றும் ஆறு மாதங்களின் பின்னர் புதிய கடவுச் சீட்டுகளுக்கான கொள்வனவு ஆணை பிறப்பிக்கும்போது, அதன் வடிவமைப்பு மாற்றப்படும் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.